T. 1528

# சைவத் திருமுறைகள்

( உரை நடை )

தருமபுர ஆதீனம்

ஓம்.

குருபாதம்.

திருக்கயிலாய பரம்
பரைத்தருமபுர ஆதீனம்
25வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய
தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
ஜன்ம நக்ஷத்திரப் பெரு
விழா மலர்.

30-10-48.

வெளியீடு எண். கஎ௫.

உ
குருபாதம்

# சைவத் திருமுறைகள்

(உரைநடை)

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவுள்ளப்பாங்கின்படி

வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1948.

பிரதிகள் 500.

ஞானசம்பந்தம் பதிப்பகம்
— தருமபுரம். —

உ

திருச்சிற்றம்பலம்

# முன்னுரை

அரைசனே அன்பர்க் கடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்இருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா றுணர்த்தே.

—திருவாசகம்.

நம் தமிழ்நாட்டின் செய்தவப்பயனும், செந்தமிழ்ப் பயனும் விளங்குவன தேவாரத் திருவாசகங்களெனும் பன்னிருதிருமுறைகளாகும் அருணூல்கள். அவை படிப்போர் தம்மை ஈர்த்தீர்த்து அரன்பால் அன்புடையாராக ஆக்குவிக்கும். திருமுறைகளை எழுதியும் படித்தும் முத்தி அடைந்தவர்தம்முள் கணநாதநாயனார் தலையாயவர் என்பது அறிந்ததொன்றே. படிக்கக்கேட்டோர் உருகுவது திண்ணம், சொல்ல நாமணக்கும்; கேட்கவும் செவிகள் மணக்கும்; கருத உளமும் மணக்கும்; பூசிக்கக் கைகளும்

மணக்கும்; இன்னபெற்றியினவாகும் சைவத் திருமுறைகள். இவ்வருணூல்களை நாளும்படிப்போர் தமிழ்நாட்டில் பலருளர். அவர்களுள் இந்நாளில் சிவக்கவிமணி, கோ. க. சுப்பிரமணிய முதலியார் B. A., அவர்கள் முதன்மையாகக் கருதப்படுபவர். அவருக்கும் அடியேனுக்கும் வழிகாட்டியாக விளங்கியவர்கள் எனதருமையாசிரியர், கயப்பாக்கம், சதாசிவஞ் செட்டியார் B. A., அவர்களாவார்கள். மறைமொழிக்கு மறைமொழியே மேற்கோளாக அமைக்கும் பண்பு அவர்பால் மிகவுண்டு. திருமுறைப்பாடல்கள் விளக்கத்திற்குத் திருமுறைப் பாடல்களே எடுத்துக்காட்டாகக்கூறுந் திறமுடையவர். அவர்தம் துணையே இன்றும் திருமுறைப்பாடல்களை யுன்னியுணர அடியேனுக்கு ஆற்றலளிக்கின்றதெனலாம்.

சைவத் திருமுறைகளின் பலபடிகள் அச்சிட்டு வழங்கப் பெறுகின்றன. ஆயினும் கல்விப்பயிற்சி மிகுதிப்பட்ட இந்நாளில் அவைகளின் உண்மைப் பொருளும் பல படிகளாக வழங்கப்பெறவேண்டும். பாடல்களை இசைகூடும் வகையால் பாடியின்புறலாம். அவற்றின் பொருள்களோ நம்மை உண்மையையுணரச்செய்து சிவபிரான்பால் அன்பு செலுத்தற்குக் கருவியாகும். சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்வோர் சிறப்புடையர். அவர்களே சிவபுரம் செல்லக் கடமைப்பட்டவராவர். எனவே சைவத் திருமுறைகளின் உண்மைப்பொருள்களை அறிதல் வேண்டும் என்னும் வேட்கை யாண்டும் எழுந்துள்ளது. யாவர் செய்வாரென்று ஏங்குமிக்காலத்தே திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துச் சிவஞானத் தலைவராகும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** இப் பெரும்பணியைத் திரு

வுளம்பற்றினூர்கள். முயன்றும்வருகின்றூர்கள். தக்காரை அப்பணியில் அமைப்பதற்குமுன், சைவத் திருமுறைகளின் பொதுச் சிறப்பு இயல்புகளை எவரும் எளிதில் அறிகின்ற வகை எழுதித்தர அடியேன்மீது திருநோக்கம்வைத்து ஆணை தந்தார்கள். அவ்வாணையைச் சிரமேற்கொண்டு போந்து திருமுறையாசிரியர்கள் திருவடிகளையுன்னியும், என்னுயிர்க்கினியவனுகும் முத்துக்குமரனை வழுத்தியும் இந்த உரைநடைநூல் தொடங்குவதானேன். இந்நூல் பன்னிருதிருமுறைகளாகும் பெரிய இன்னமுதக்கடலினை ஒரு சிறு கரகத்தில் எடுத்துத் தருவதொக்கும். இந்நூலில் நூலின்றிறம், திருமுறைப்பெயர்களின் பொருள்விளக்கம், திருமுறைகளின்வகை, சில திருமுறையாசிரியர்கள் வரலாறுகள் ஆகியவைகள் தரப்பட்டிருக்கின்றன. இவ்வெளியீடு இன்று **ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் முப்பத்தைந்தாவதாண்டு ஜன்மநக்ஷத்திர விழா மலராக** வெளிப்படுத்தப்படுகின்றது.

என்னையும் பொருட்படுத்தி "இப்பணிபுரிக" என்று சிவப்பணியில் ஈடுபடுத்தி அருளாணைதந்த குருமகாசந்நிதானம் அவர்கள் உலகிற்குப் பல்லாற்ருனும் நன்மைகள் பாலித்து வருகின்றனர். சைவசமயக் கொள்கைகள் பரப்பவும் மக்கட்கு அமைதியைநாட்டவும் நல்லறிவுகொளுத்தவும் பற்பல பேரறிஞர்களையும் சமயப்புலவர்களையும் அதிவேக ஊர்தியில் அனுப்பிப் பிரசாரம் செய்துவருகிறூர்கள். இது காலத்துக்கேற்ற நன்முயற்சியென யாவரும்போற்றற்குரியது. சைவசாத்திரங்களையும்; திருமுறைப் பதிகங்களையும் அச்சிட்டு வழங்கிவருகின்றூர்கள். இன்னோரன்ன பணிகள் பொதுமக்கள் சமய வரம்பினின்று நனெறியொழுகி உய்திபெறுவதற்கே ஆற்றப்படுவன.

புத்தம்புதிய முறைகளில் சமயப்பணி உலகமுன்னேற்றத் திற் காற்றிவரும் பேரருளுடைய குருமகாசந்நிதானத்தின் அருளாட்சி நீடூழிவாழ்கவென வாழ்த்துவதேகடமையாம்.

இவ்வுரைநடை நூல் ஆக்க ஆணை தந்து ஊக்கியமைக்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பொன்னார் திருவடிகளில் மனநிறைந்தநன்றியை அறிவித்துக்கொள்ளு கிறேன். அவர்கட்குத் திருவருள்ஞானத் தொண்டராகும் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பெருமுயற்சியும் மறக்கபாலதன்று. அன்னாருக்கும் என் நன்றியுரித்தாகுக. தோன்றாத்துணையாய்நின்று இதனை எழுதுமாறு செய்வித்த எல்லாம்வல்ல இறைவனது பெருங் கருணையை மனமொழி மெய்களால் பெரிதும் போற்று கின்றேன்.

*" குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்*
*கற்றறிந்த மாந்தர் கடன்."*

திருவொற்றியூர்,
29—10—'48.

இங்ஙனம்,
**ரா. சண்முகசுந்தரன்.**

உ

சிவமயம்

# சைவத் திருமுறைகள்

மாநிலத்து விளங்கும் மன்னுயிர்களுள் மக்கட் பிறவியினரே மாண்புடையவரென நுண்ணறிஞர் பலரும் கருதுவர். பிறவுயிர்களினின்றும் வேறு படுத்தி உயர்த்துவது மக்கட்குள்ள பகுத்தறிவே யாகும். அப்பகுத்தறிவு கலையறிவால் நாளும் விளக் கத்தில் சிறப்புறுகின்றது. அளவை முதலிய கருவி நூல்களும் கலைஞானங்களால் கற்றறிந்த பொருளை முட்டின்றித்தெளியத் துணைசெய்வன. இங்ஙனம் அறிவு விளக்கந்தரும் நூல்கள் எண்ணிலாதன; பல திறப்படுவன. இவைகளை முதல், வழி, சார்புநூல் கள் எனத் தொல்லாசிரியர்கள் அவை வெளிவந்த வழிகருதி வகைப்படுத்தினர். இயல்பாகவே பாசங் களினீங்கி விளங்கிய அறிவுடையோனால் ஆக்கப் படுவது முதல்நூலெனப்படும். இம்முதல்வன் வழிப் போந்து காலத்தாலும் இடத்தாலும் உணர்வு மிகுதியானும் வினவப்படும் ஆசங்கைகளையறுத்து முதல்வன் கருத்தையே வலியுறுத்தி எழும் நூல்கள் வழிநூலெனப்படும். இவ்விருவர் நூல்களைத் தழுவிப்

பல்வேறு பொருள்களைப்பெய்து விளக்குமியல்புடையது சார்புநூல். நூலினளவு கருதியும் தொகை, வகை, விரியென்றும் வகைசெய்வதுமுண்டு. நூல்கள் பொருள்களைக் கற்பிக்குமுறை நோக்கி பிரபுஸம்ஹிதா, சுகிர்த்ஸம்ஹிதா, காந்தாஸம்ஹிதா எனப் பிரிவுசெய்தனர் வடமொழிவல்லோர். மேல்நாட்டறிஞர் இரஸ்கின் என்பார் நூலில் நுவலப்படும் பொருள்களையாராய்ந்து காலத்தையொட்டிய நூல்கள் எனவும், என்றும் நிலவும்நூல்கள் எனவும் நூல்களை வகைப்படுத்தினர். இப்பிரிவுகள் யாவும் வழி, அளவு, முறை, நுவலப்படும் பொருளின் பெருமைபற்றிப் போந்தனவாகும்.

இனி நூல்களில் நுவலப்படும் பொருள்களைப் பற்றிச் சிந்திப்போமாக. மண் தத்துவத்தைப் பற்றிய நூல்கள் சில. நீருலகம்பற்றிய நூல்கள் சில. அங்ஙனமே சில தீயுலகம்பற்றியன. சில கட்புலனாகாத காற்றினையும் விசும்பினையும் பற்றியன. சில இவ்வைந்து பூதங்களின் சேர்க்கையாற் றோன்றிய பொருள்களைப்பற்றியன். பொதுவாக நூல்கள் எவ்வெப்பொருள்களைப்பற்றி ஆராய்கின்றனவோ அவ்வப்பொருள்களின் பெயர்களையே புனைகின்றன. விசும்பிடைமிளிரும் விண்மீன் நிலைபற்றிய நூலெனின் வானசாஸ்திரம் எனப் பெயர்பெறும். ஒலிநூல், வரலாறுகள், பூகோளம், கணிதம் எனும் பெயர்கள் நுவலப்படும் பொருள்களைப்பற்றியனவேயாம். இவற்றின்பயனாக மக்கட்குப் பலவகைப்பட்ட

அறிவுகள் தோன்றாநிற்கும். ஆயினும் மூலகாரண மாகும் உண்மைப்பொருளையறிதற்கு இவ்வரிய நூல்கள் பயன்படுவதில்லை. கணிதநூல் மிக்க பெருமையாகப் போற்றப்படுவதே. எண்களால் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல்முதலியன கற்பிக்கப்படுகின்றன. அந்தநூல் எண் வந்தவாறு போதிப்பதில்லை. கோட்டுக்கணக்கிலும் ஒருகோடு பல புள்ளிகளாலாயதென்பர். புள்ளிகள் தோன்றிய வாறு விளக்கப்படவில்லை. இலக்கண நூலிலும் ஒலிகாரணமாய் எழுத்து பிறக்கும் என்று போதிக்கப்படும். ஒலி எங்ஙனம்தோன்றியது என்று அவ் இலக்கண நூல் கூறிற்றிலை. இங்ஙனமே நூல்கள் ஒரு பொருளுண்டு என்றுட்கொண்டு அதனது தோற்றம், ஆக்கம், மறைவு, பயன் முதலியன ஆராய்ந்து முடிபுகுறிக்கும். மேற்கூறிய நூல்களும் எண்ணுண்டு, புள்ளியுண்டு, ஒலியுண்டு என்றே மேற்கொண்டு பிற இலக்கணம் முதலியவற்றை ஆராய்கின்றன. முதலில் ஆராயாது மேற்கொண்ட உண்மைப் பொருளைப்பற்றிய ஆராய்ச்சி அவைகளில் பேசப்பெறுவதில்லை. எங்ஙனம் இதுகாண வியலுமெனின், தத்துவ நூல்களில்தான் உணர வியலுமென்று மொழியலாம். எனவே கலைஞானங்கள் கற்பிக்கும் நூல்களினும் தத்துவ நூல்கள் சிறப்புறுகின்றன. அவை எவற்றிற்கும் காரணமாகும் உண்மைமுதலை ஆராய்வன. காணப்படும் உலகத்தைக் கூர்ந்துநோக்கி அதற்குக் காரணமாகும் மண்முதல் நாதமீறாகவுள்ள தத்துவங்களை வேறு

வேறாகக்கண்டு அவற்றினியல்பு, செயல், பயன் முதலியவற்றை விளக்கும் பான்மையதாகும். இவற்றிற்கு மூலகாரணமாகும் பொருளை அளவை நுண்ணறிவால் புலப்படுத்துகின்றன. இத்தத்துவங்கள் யாவும் அறிவற்றபொருள்களே. இவற்றைக் கருவியாகக்கொண்டு விளங்கும் அறிவுப்பொருளுண்டு. அவ்வறிவுப்பொருள்கள் பலவாய் பலப்பல உடல்களோடு விளங்குவன. அவைதான் உயிர்களென்று உணர்த்தப்படுகின்றன. உடல்களின் வேறுபாடு உடைமைக்கும் தத்துவநூல்கள் காரணங் கற்பிக்கின்றன. உயிர்களும் உடலோடுகூடி இயங்குங் காலை நனவு, கனவு, பேருறக்கம் முதலிய நிலைகள் அடைகின்றன. நினைப்பும் மறப்பும் மாறிமாறி அநுபவிக்கின்றன. இதனுனே இன்பமும் துன்பமும் நிகழ்வன. இன்னோன்ன பொருள்கள் அறிவிக்கப்படுவதோடு சிறுமையுற்று விளங்கும் உயிர்களை இயக்கிநடத்துந் தனிப்பெரும் ஆற்றலுடைய இறைவனுண்டு என்றுணர்த்தும்வரை தத்துவ நூல்கள் பயன்படாநிற்கும்.

இனி இறைவனியல்பும், அவனதருளின் திறமும் சமயநூல்கள் விளக்குவனவாகும். உலகில் உயிர்களின் பக்குவத்திற்கேற்பப் போந்த சமய நூல்கள் யாவும் உயிர்கள் தம்மினும் உயர்ந்த முற்றறிவும் முடிவிலாற்றலும் இன்பமுமுடைய பரம்பொருள் உண்டு எனப் போதிப்பன. அவனையடைதலினலே நிரந்தர இன்பம்பெறுவதோடு பிறவாமையையும்

அடையலாகும். துன்பம்நீங்கி இன்பம் பெறுதற்குரிய சாதனங்களையும் நெறிகளையும் கற்பிப்பன. அங்ஙனம் நிற்போர் ஆண்டவன் அருள்வீட்டில் வீற்றிருப்பார். கீழ்த்திசையுலகமாகிய நம்நாட்டில் தத்துவ நூல்களும் சமய நூல்களும் ஒன்றுபடவே விளங்கும். இது தத்துவநூல், இது சமயநூல் என்று பிரிக்க இயலாததாகும். இங்ஙனம் கண்ட நூல்கள் யாவும் பெரும்பாலும் செய்யுள் வடிவமாகவே உள்ளன. அவற்றுள்ளும் பல தோத்திரவடிவமாயிருக்கும். சில ஆசிரியர் மாணவர் வினாவிடையாகவுள்ளன முன்னது உயிரினுணர்ச்சியை எழச்செய்து இறைவனோடு ஒன்றுவிக்கும் இயல்புடையது. பின்னது அறிவின் கிளர்ச்சியையுண்டாக்கி எழுகின்ற ஞானத்தால் இறைவனோடு ஒன்றுவிக்கும். இவை இரண்டும் ஒரு பயனையே கூட்டிவைப்பினும் தோத்திரங்களே மிக்க எளிமையில் பயன்தரவல்லதென மூதறிஞர்களது கருத்து.

பண்டைக் காலத்திலும் தோத்திரங்களையே மேன்மையாகக்கருதினர். வடமொழியில் போந்த நான்மறைகளில் ஸம்ஹிதா, பிராஹ்மண்யகம், ஆரண்யகம், உபநிடதம் எனும் நான்கு பகுதிகளினும் ஸம்ஹிதாபாகமாகிய தோத்திரப்பாடல்கள் போற்றப்படுகின்றன. வீட்டின்பமன்றிவேறொன்றிலும் பற்றிலாத விழுமியோர்கள், வேறுவாயில்கள் இன்றிப் பாட்டுக்களால் தொழப்படுந் தன்மை வாய்ந்த பண்பனே என்று,

"வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே"

எனவருந் திருப்பாட்டினடிகளில் ஆளுடைய பிள்ளையார், தோத்திரங்களின் இன்றியமையாமை யைக் குறித்தார். மேலும் திருவருள்பெற்றோர் காதலினாலே செம்மையுற்ற சிந்தையோடு ஆண்ட வனதரும்புகழைப் பாடிக்கசிந்து கலந்தவர் என்று,

"நலந்தரு சிந்தையராகி நாமலி மாலையினாலே
கலந்தவர் காதலில்வாழுங் கற்குடி மாமலையாரே"

எனவருந் தேவாரத்துள் போற்றியதறிக. யாவர்க் கும் பெரியானாகித் தன்னுள் எல்லாப்பொருளையும் ஒடுக்கிக்கொள்ளும் பெம்மானை,

"வாக்கென்னும் மாலைகொண்டுன்னை யென்மனத்
தார்க்கின்றேன்"

எனச் சுந்தரர் அருளுவதும் கருதற்பாலதாகும்.

"நாமாலை சூடியும் நம்மீசன் பொன்னடிக்கே
பூமாலை கொண்டு புனைந்தன்பாய்—நாமோர்
அறிவினையே பற்றினால் எற்றே தடுமே
எறிவினையே என்னும் இருள்"

எனும் அற்புதத் திருவந்தாதி வெண்பாவில் காரைக் காலம்மையார் நாமாலை சூடுதலும் பூமாலை சூடுத லும் சிறந்த அறிவு என்றறிவிக்கின்றனர். இங்ஙு னமே, மேனாட்டறிஞர் பலரும் தோத்திரங்களின்

பெருமைகளை விரித்துரைக்கின்றனர். "எங்கெங்கு சமயங்கள் நிலவுகின்றனவோ அங்கங்குச் சமயச் சடங்குகளில் ஒன்றாகத் தோத்திரங்கள் நிகழ்கின்றன. அத்தோத்திரங்கள் உயிர்கள் இயல்பாய இன்னலுற்ற காலத்து இறைவனின்னருள்வேண்டி எழுகின்ற விண்ணப்பங்களாகும்" என்பது ஒரு தத்துவ நிபுணர் கருத்தாகும்.* ஆங்கில நாட்டுப் பேரவைக் கவிஞரும் பிரபு டெனிஸன் (Lord Tenneyzon) "எண்ணில் பயன்கள் தோத்திரங்களால் பெறப்படுகின்றன" என்றருளினர். முயற்சியால் பெறுதனவெல்லாம் தோத்திரங்களால் பெறவியலும் என்றவுண்மையை நன்குணர்ந்தவர். அமெரிக்கா நாட்டு உளநூல்வல்லுநராகும் வில்லியம் ஜேம்ஸ் என்பாரும் "சமயம் என்பது உயிருக்கும் இறைவனுக்கும் நேர்படும் சம்பந்தம். இச் சம்பந்தம் தோத்திரங்களால் அடையப்படுவது ஒரு தலை; தோத்திரங்கள் மொழிகளின் அடுக்கல்ல; அல்லது மந்திரங்களின் தொகுதியல்ல; அவை உயிருணர்ச்சிக்கு எழுச்சியைத் தந்து இறைவன் பால் சேர்க்கவல்லன. தோத்திரங்கள் இல்லையெனின் சமயம் இல்லையென்றே கூறலாம்" என்று

---

*Prayer is one of those religious acts which are practised wherever religion exists. It is the instinctive cry of the human soul to a power that can help it in its time of need - Philosophy of Religion by George Galloway.

மொழிந்தது சிந்திக்கற்பாலதொன்றாம்.* இன்னும் பேரறிஞர் பேருரைகள் பாமாலைகளின் சிறப்புக்களைப் பாராட்டியுரைக்கும். அறம்பொருளின்பம் வீடடைதல் நூற்பயனாகும். அவற்றுள் வீட்டினையே சான்றவர் கருதுவர். எனவே வீடெனும் உறுதிப் பொருள் மெய்ஞ்ஞான நூல்களின் உண்மைக் குறிக்கோளாகும்.

> "நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு
> மாலடைந்த நால்வர்கேட்க நல்கிய நல்லறத்தை
> ஆலடைந்த நீழல்மேவி அருமறை சொன்னதென்னே
> சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே"

என்ற திருஞானசம்பந்தர் திருப்பாட்டானும் அறிக. கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள்

---

*Religion is an intercourse, a conscious and voluntary relation, entered into by a soul in distress with the mysterious power upon which it feels itself to depend and upon which its fate is contingent. This intercourse with God is realized by prayer .................. This act is prayer by which term I understand no Vain exercise of words, no mere repetition of certain sacred formulae but the very movement itself of the soul, putting itself in a personal relation of contact with the mysterious power which it feels the presence. Wherever this interior prayer is lacking, there is no religion...........this prayer rises and stirs the soul. The varieties of Religious Experience by William James.

தொழுதலே யாகுமன்றே? எனவே நூல்கள் பல வற்றுள்ளும் மருளானும் மாணுப்பிறப்பைப்போக்க மருந்தாகும் தோத்திரப்பாக்கள் சிறப்புறுகின்றன.

## திருமுறைகளின் பண்பு

இனித் தோத்திரங்களின் தொகுதியாகும் திருமுறைகளைப்பற்றி ஆராய்வாம். முழுமுதற் கடவுளாகும் சிவபெருமானைப் புகழ்ந்து துதிக்கும் இயல்பின திருமுறைகள். இவை சிவபிரான் திருவருள் நிறைந்த கருவூலம் எனலாகும். பரம்பொருளாகும் சிவபிரானது திருவருளைப்பெற்ற ஆளுடையபிள்ளையார் முதலாக அருண்மொழித்தேவர் ஈருக இருபத்தெழுவர் அருளப்பெற்றனவும் உடல் உயிர் கண் அருக்கன் அறிவொளிபோற் பிறிவரும் அத்துவிதமாகுஞ் சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தத் திறத்தினைத் தெரிக்கலுறுந் தேவாரமுதல் திருத்தொண்டர்புராண மிறுதியாயுள்ள திருப்பாக்கள் திருமுறையெனப்படும். பிற நூல்கள் இப்பெயர்கொண்டு நிலவினும் சைவத் திருமுறைகளாகா என்பது சைவப்பெரியார்களது துணிபு.

இங்ஙனம் கூறியவாற்றால் திருமுறைகள் தெய்வத்தன்மையுள்ள நூல்களென்றுணரப்படும். அதனை எவரும் மறுக்கவொண்ணுததுதான். நூல்களின் பெயர்கள் ஆக்கியோன் பெயராலும் நூல்

நுதலிய பொருளின் பெயராலும் அமைக்கப்படு வது வழக்கு. தொல்காப்பியம் எனும் பேரிலக்கண நூலினுக்கு ஆக்கியோராகும் தொல்காப்பியரது பெயரால் பெயர் அமைக்கப்பட்டது. மணிமேகலை யின் வரலாறு கூறிய நூலினுக்கு மணிமேகலை என்ற பெயர் தரப்பட்டது. சிலம்பின்மேல் வந்த காதைக்குச் சிலப்பதிகாரம் என்னும் பெயர் வழக் காயிற்று. இங்ஙனமே நூற்பெயர்கள் எழுந்தன. நூலின் உட்பொருள்கொண்டே திருமுறை எனும் பெயரும் வழங்கியது என்னலாம். இத்தொடர் திரு+முறை என்றவிருமொழிகளின் சேர்க்கையா லாயது. திரு என்பது சிவத்தைக்குறிக்கும். 'சிவமே பெறுந்திருவெய்திற்றிலேன்' என்றார் மணிவாசக ரும். "திருவே" என்று அப்பரும் ஆரூர்ப் பெரு மானையழைத்தனர். முறை என்பது நெறி என்று விளக்கப்பட்டது. "முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும்" என்ற திருக்குறளில் முறை என்பதற்கு 'அற நூலும் நீதிநூலும் சொல்லும் நெறி' என்று பரிமே லழகர் விசேடவுரை குறித்தனர். எனவே திரு முறை என்பது சிவத்தையடையும்நெறி என்று பொருள்படும். சைவத்திருமுறைகள் யாவும் சிவ பிரானையடையும் வழிகளைக் கற்பிப்பனவேயாகும்.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு. அவற் றின் விரிவு பின்னர் உரைக்குதும். அவைகளுள் முதல் ஏழு திருமுறைகளைத் தேவாரம் என்பர்

அது பலபொருள் பயக்கும் மேன்மையுடைத்தென யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதர் அவர்கள் தாம் இயற்றிய அடங்கன்முறையின் முகவுரையில் குறித்துள்ளனர். அதனைக் கற்றுணரவல்லார்க்குப் பயனாகும்படி இங்குத்தருகின்றாம்.

க. தே + வாரம். தேவனிடத்து வாரத்தை விளைவிப்பது. அஃதாவது சிவபிரானிடத்து (அதனை ஓதுவோர்க்குங் கேட்போர்க்கும்) அன்பை யுண்டு பண்ணுவது என்பதாம்.

பேரழகு, பேராண்மை, பெருங்கல்வி, பேரறம் முதலியவற்றையுடைய ஆண்மகனது இலக்கண முதலியவற்றை ஓதல் கேட்டல்களைச் செய்த துணையானே மகளிர்க்கு அவன் மாட்டுக் கழிபெருங்காம மீதூர்தல்போல, சிவபிரானது இலக்கணங்களும், அருட்குணங்களும் பிறவும் திராவிட வேதத்தின்கட் கூறப்பட்டிருத்தலான், அவற்றை ஓதல் கேட்டல் களைச் செய்த துணையானே மக்கட்குக் கழிபெருங் காதல் மீதூருமென்றுணர்க.

திராவிட வேதத்தை ஓதல், கேட்டல்களைச் செய்த மாத்திரையானே நம்மனோர்க்குச் சிவ பிரான் மாட்டுக் கழிபெருங்காதல் மீதூர்தல் ஒருதலை யென்பது அநுபவப்பிரமாண மாகலான் இதற்குச் சுருதிப் பிரமாணம் வேண்டுவதன்று; வேண்டுமாயின்,

"வெள்ளேறுடையான் றனக்கு அன்புசெய் திருத்தாண்டகவேந்த"

எனவும்,

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர் காண்கிலேம்;
திருவாசகமிங் கொருகால் ஓதின்
கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே"

எனவும் வருவனவற்றா லுணர்க.

'அன்பு செய் தாண்டகம்' என்புழிக் "குடி பொன்றிக் குற்றமுமாங்கே தரும்" எனவும், "மெய்ஞ் ஞானந்தானே விளையும்," எனவும், "அரசன் எடுத்த ஆலயம்" எனவும் வரும் வாக்கியங்களிற் போல விவ்விகுதி தொக்கு நின்றது; எனவே, ஓதல் கேட்டல்களைச் செய்த துணையானே சிவபிரான் மாட்டன்பைச் செய்விக்குந் திருத்தாண்டகம் என்பது பொருள்.

உ. தே + வாரம். சிவபிரானுக்குத் (தன்னிடத்தும் தன்னை யோதுவோரிடத்தும்) இன்பத்தை விளைவிப்பது. அதனிடத்தும், அதனை யோதும் பத்தர்களிடத்தும் சிவபிரான் வாரமுடையராவர் என்பது கருத்து. அதனை,

"பாட்டிற் கின்புறு குருபரன்"

எனவும்,

ஒழித்திடும்பவப் பகைவிரைந் துள்ளமே
யோதுமூ துணர்வோர்முற்
பழிச்சுபாடலை யாற்கவை விடர்க்கிளம்
பாவைய ருரைபோலுங்
கழித்திடேலுப சாரமென் றிதனை நீ
கட்டுரை யெனக்கொள்வாய்
விழித்துமாரனை யெரித்ததே வருள்பெறும்
விருப்பினர் விருப்பீதே"

எனவும்,

"கூட வேடத்த ராகிக் குழுமிலென்
வாடியூனை வருத்தித் திரிகிலென்
ஆடல் வேடத்த னம்பலக் கூத்தனைப்
பாட லாளர்க்கல் லாற்பய னில்லையே"

எனவும்,

"படியிலா நின்பாட்டி லாரூர
நனிவிருப்பன் பரமனென்ப
தடியனே னறிந்தநன்வான் ஞெழுமீசன்
நினைத்தடுத்தாட் கொண்டுமன்றித்
தொடியுலா மென்கைமட மாதர்பால்
நினக்காகத் தூதுசென்றும்
மிடியிலா மனைகடொறு மிரந்திட்டும்
உழன்றமையால் விளங்குமாறே"

எனவும்,

"தண்மல ரும்பொழிற் றென்கம
லேசர்க்குச் சாத்துகின்ற
ஒண்மலர் சொன்மலர்க் கொவ்வாது
போலுமற் றோர்புலவன்
பண்மலர் சாத்திப் பணிகொண்ட
வாயச்சை மால்சிவந்த
கண்மலர் சாத்தியுங் காண்பரி
தான கழன்மலரே"

எனவும்,

"ஓது நாவினுங் கேட்டவர் செவிப்புலத் துள்ளும்
..............மாது பாகனுற் றுறைகுவன்"

எனவும் வருவனவற்ருன் உணர்க.

மேலும், 'பாடுவார் பசிதீர்ப்பாய்' எனவும், 'அளப்பிலகீதஞ் சொன்ஞர்க்கடிகடாமருளுமாறே' எனவும் வரும் தமிழ்மறைகளானும் உணர்க.

௩. தே + ஆரம். சிவபிரானுக்கு ஆரம்போல அலங்கரிப்பது.

அதனை, "பழுதிலாத சொன்மணியினைப் பத்தி செய்தன்பு, முழுதுமாகிய வடத்தினன் முறை தொடுத்தலங்கல், அழுது சாத்து மெய்யன்பருக்கு அகமகிழ்ந்தையர்" என்பதனான் உணர்க.

௪. தே + ஆரம். தெய்வத்தன்மை பொருந்திய பாமாலை. அது, "பன்மாலைத் திரளிருக்கப் பாமாலைக்கே நீதான் பட்சமென்று, நன்மாலையா வெடுத்துச் சொன்னார் நல்லோர்" என்பதனான் உணர்க. இப்பொருட்குத் தேவ + ஆரம் எனப் பிரிப்பினு மமையும்.

௫. தே + வாரம். சிவபெருமானுக்கே உரிமையுடையது; வாரம்-உரிமை. வேதம் போலாது சிவபெருமான் ஒருவரையே பதியெனக்கொண்டு போற்றலின் சிவபிரானுக்கே உரியதென்னும் பொருளுஞ் சிறந்தமை காண்க.

௬. தே + வாரம். தெய்வத்தன்மை பொருந்திய வாரமாயுள்ளது என்பாருமுளர்.

தெய்வத்தன்மை பொருந்திய வாரமாயுள்ளது என்றதனை விளக்குவாம். வாரம் என்பது:—இசையின் இயக்க நான்கனுளொன்று, உரு, தெய்வப் பாடல், பற்று எனப்பொருள்படும். அது "வார நிலத்தைக் கேடின்று பார்த்தாங்கு" எனவும்,

"வாங்கிய வாரத்து" எனவும், "வாரம் பாடுந்தோரிய மடந்தையும்" எனவும் வரூஉஞ் செய்யுட்களாற் பெற்றும். முதனடை, வாரம், கூடை, திரள் என்று சொல்லப்பட்ட இசையியக்கம் நான்கனுள், முதற்கணுள்ளது மிகவுந்தாழ்ந்த செலவினையுடைத்தாகலானும், இறுதிக்கண்ணுள்ள திரள் என்பது மிகவும் முடுகிய நடையினை யுடைத்தாகலானும், இடைப்பட்ட இரண்டனுள், வாரப்பாடலே சொல்லொழுக்கானும், இசையொழுக்கானும், சிறந்ததாகலின் அதுவே இசைத்தமிழ்ப் பாடற்குரிய சிறப்பியக்கமென்க. அத்துணை விசேட வியக்கமுடைமையோடு தெய்வத்தன்மையு மமைதலில் தேவாரம் என்பதுமொன்று.

உருவாவது:— கந்த முதலாகப் பிரபந்த வுருவீறாகவுள்ள அக நாடகங்களுக்குரியன இருபத்தெட்டும், தேவபாணி முதலாக அரங்கொழி செய்யுவீறாகவுள்ள புற நாடகங்களுக்கு உரியனவெல்லாமுமாகிய மங்கலப்பண்ணாற் பாடப்படும் பாட்டுக்களாம். இவை நாடகவியற்குரியனவென்க. மூவர் முதலிகள் திருவாய் மலர்ந்தருளிய தமிழ் வேதப் பதிகங்களும், மங்கலப்பண்களாணியற்றப்பட்டு, மங்கலச் சொற்களையுடையனவாய், உக்கிரம், துருவை, ஆபோகம், பிரகலை என்னும் நாலுறுப்புக்களுங் குறைபாடில்லாத உருவுக்குச் சொற்படுத்தியும் இசைப்படுத்தியும் தேவர்ப்பராவுந் தேவபாணியாகக் கொட்டுங் கூத்தும் நிகழ்த்தித் தெய்வத்

திருவருள்வழி அருளப்பட்டனவாகலின் தேவாரம் என்னும் பெயர்த்து என்க.

தெய்வப்பாடலென்பது:— நாடகத்தில் அவதாளம் நீங்கவும், தாளம் பொலிவுறவும், நன்மை உண்டாகவும், தீமை நீங்கவும், முதலிலும் இறுதியிலும் பாடப்படுவதாம். அங்ஙனே தமிழ் வேதமும், சிவபெருமான் திருமுன்னிலையிலே நின்று தற்போதங் கெடவும், சிவகரணம் பொலிவுறவும், உலகர்க்கு நன்மை விளைவிக்கவும், மூவகைத் துன்பமிரிக்கவும் ஓதியருளப்பட்டமையானும், நாடகம் போன்ற பிரபஞ்ச வியாபாரங்களில் முதலினும் இறுதியினும் ஓதப்படற்குரிமையானும் தேவாரம் என்னும் பெயரையுடைத்து என்க.

பற்றாவது:— விதிப்படி கொண்ட அரங்கத்திலே தலைக்கோற்பட்ட அரிவையென்பாள் அகக்கூத்துப் புறக்கூத்திற்குரிய வரி, பாணி, தூக்கு, குயிலுவக்கருவி என்னு நான்குமுணர்ந்து, நால்வகை அவிநயநிலத்து நின்று கூத்தாடி முடித்த பின்பு, அவள் காலுக்கு ஒத்தறுத்து இடத்தூணிற் சேர்ந்துநின்று தோரிய மடந்தை, தலைப்பாட்டுக் கூத்தி, இடைப்பாட்டுக்கூத்தி யென்னும் பாடன் மகளிர் மூவரானும் பாடப்படும் ஓரொற்றுவாரம், ஈரொற்றுவாரம் என்னுந் தேவகானமாம். இத் தமிழ் வேதமும் பற்றென்னும் பாடல் போன்றதாகலின் வாரம் எனப்பட்டது. எங்ஙனமெனில்,

பெருமைவாய்ந்த திருச்சபைகளிலேறி யாவர்க்கும் எவற்றிற்கும் தலைமையாக விளங்கும் சபாநாதனாகிய நடராசப்பெருமான், ஆன்மாக்களின் இருவினைகட்கு மேற்றதநுகரணபுவனபோகம் என்னும் நான்கையுமுணர்ந்து, பஞ்சகிருத்திய தாண்டவ நிகழ்த்துழி, அவன் திருவடிக்கு ஒத்தறுத்து அவனருள்வழி நின்று, நால்வேத வாய்மைவைத்து மூவர்மகளிர்போலும் மூவர் முதலிகளாற் பாடப்பட்ட வாரம் ஆகலின் தேவாரம் ஆயிற்றென்க.

இங்ஙனங் கூறியவாற்றால் தேவாரம் என்னும் தூய்மொழியின் அரும்பொருள் நன்குணர்த்தப்பட்டது. தேவாரத்தின் செம்பொருள் விளக்கியதன்றி ஓதுவோர் பெறும் பயனும் சிவபிரான் அருட்டிறனும் குறிக்கப்பட்டமையுணர்க. மொழிக்குமொழி தித்திக்கும் இனிய இச்செந்தமிழ்ப் பாடல்களைப் பரமனும் பத்தர்களைப் பாடுமாறு பயிற்றுகின்றானென ஆளுடையவரசுகளது "பத்திமையாற் பணிந்தடியேன் றன்னைப் பாமாலை பாட பயில்வித்தானை" எனும் திருத்தாண்டகத்தால் அறியக்கிடக்கின்றது.

இனித் தேவாரம் என்று வழங்கப்பெறும் ஏழு திருமுறைகளும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தியார் எனும் மூவரால் அருளப்பட்டவை. அவரவர்கள் அருளிய முறைமைகருதி அவ்வேழு திருமுறைகட்கு மூன்றுபெயர்கள் வழங்

கினர். அவை திருக்கடைக்காப்பு, தேவாரம், திருப்பாட்டு என்பன. ஆளுடையபிள்ளையார் அருளியன திருக்கடைக்காப்பெனப்படும்; அப்பர் அருளியன தேவாரம்; சுந்தரர் அருளியன திருப்பாட்டாகும். ஆளுடையபிள்ளையார் அருளியன திருநெறியதமிழ் எனவும் கூறுப. அவரும் தமது பாக்களைத் திருநெறியதமிழென்றே மொழிந்தார். திருக்கடைக்காப்பு என்றமைக்குக் காரணமுண்டு. இறுதிப் பாடல்தோறும் காத்தற்பயன் கூறிப்போந்தமையின் திருக்கடைகாப்பு என்றார்பலரும். திரு என்பது அழகு; கடையென்பது இறுதியாகும்; காப்பு என்பது காத்தல். இங்ஙனமே சுந்தரர், காரைக்காலம்மையார், கருவூர்த்தேவர், கண்டராதித்தர், திருவாலியமுதனார், புருடோத்தமன், சேதிராயர், சேந்தனார் திருக்கடைக்காப்பு கூறி அவற்றில் தம்தம் திருப்பெயர்களும் திருப்பதிகப்பயன்களும் உரைத்தனர். இவ்வாறு கூறுவதனை நாந்தியுரைத்தல் என்ப.

ஏனைய திருமுறைகள் திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினொராந்திருமுறை, திருத்தொண்டர்புராணம் எனத் தனித்தனிப் பெயர்களுடையன. அவற்றின் சொற்பொருள்களும் முன்னர்க்கூறியதனோடு பொருத்தமுறுவன. "திருவாசகம் என்பது திருமயமான வாசகமெனப் பொருள்படும். ஈண்டுத் திரு அருட்டிரு எனவே, அருள்நாதவடிவான வாசகம் என்றவாறாயிற்று. திருவாசகமென்பது, அழகிய

வாசகத்தை யுடையதென அன்மொழித்தொகையாய் வாதவூரடிகள் அருளிச்செய்த தமிழ்வேதத்திற்குக் காரணக்குறியாயிற்று." திருவாசகம் என்பது சிவத்தையறிவிக்கும்நூல் என்று கொள்வாரும் உண்டு. வாசகம், வாச்சியம்என்ற சொற்களிரண்டும் நூலையும் நூல்நுதலிய பொருளையும் குறித்தன. திருவாசகம் நூலாதலின் அதனாற்குறிக்கப்படும்பொருள் சிவமேயாகும்.

"பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே
வாசகம் அதற்கு வாச்சியம்
தூசகல் அல்குல்வேய்த் தோளிடத் தவனே."

எனவரும் நால்வர் நான்மணிமாலைத் திருப்பாட்டானும் அறியத்தக்கது. வாதவூரடிகளார் அருளிய திருக்கோவையாரும் சிவமேபெறுந் திருவையளிப்பதாகும்.

இனித் திருவிசைப்பா எனும் திருப்பெயரும் சிவத்தினது புகழ்மாலை என்னும் பொருள்தருவது. மேலும் இசைபொருந்திய பாக்களையுடைய நூல் எனக் கோடலுமாம். இசை உள்ளத்துணர்ச்சியினை இறைபால் இழுத்துச்செல்லுமியல்புடையது. சுந்தரரும் ஆளுடையபிள்ளையாரை "நாளுமின்னிசையால் தமிழ்பரப்பு ஞானசம்பந்தன்" எனப்போற்றியருளினார். திருஞானசம்பந்தர் இசை வன்மையையும் அதனாற்பெறும் பயனையும் நன்குணர்ந்தனர்போலும்.

ஆனாயநாயனார் குழலூதி இன்னிசைபெருக்கி இறவாத இன்பவீடு பெற்றார் என்பது திருத்தொண்டர் புராண வரலாறன்றோ! மேல்நாட்டறிஞராகும் கார்லைல் என்பார் இசை என்பது பேசுதற்கற்ற ஆழ்ந்த பேச்சு என்றும், இறைவன் சமீபம் அணுமிக்கும் ஆற்றலுடையதென்றும், அதனைக் காண்பதற்கு ஒருகணநேரம் காலம் தருமியல்புடையது என்றும் போற்றுகின்றனர் † எனவே திருமுறைகள்யாவும் இசைப்பாவாக விளங்குந் தன்மை வாய்ந்தவை. திருப்பல்லாண்டும் திருவிசைப்பா என்னும் அருள் நூலினுக்கு அங்கமாய் அமைவது.

இனித் திருமந்திரம் என்பது சிவத்தை நினைப்பார்க்குக் கூட்டுவது என்று பொருள்படுகிறது. இறைவன் இயல்பு "நினையாதாரை நினையானை, நினைவோரை நினைவோன்றன்னை" எனவும் "உன்னிலுன்னும் உன்னுவிடில் விட்டிடும்" எனவும் வரும் அப்பர் திருவாக்குக்களானறிக. பெரியபுராணம் என்பது ஆண்டவனிடத்துக் கழிபேரன்புடையார் பெறும் அருட்டிறம் வெளிப்படுத்துவது அறிந்த தொன்றே. மேலும் சிவத்தின் அநாதியான பழைமையை விரித்துரைப்பதாம். தனிப்பெயரின்றிய பதினொராந் திருமுறையும் சிவபிரான்மீது புகழ்

†Music is a kind of inarticulate unfathamable speech, which leads us to the edge of the infinite and lets us for moments gaze into that.

மாலையாயும், விநாயகர் முருகன் புகழ்மாலைகளாக வும், அடியார் புகழ்மாலைகளாகவும் விளங்குவனவா யினும் சிவத்தையடையும்நெறியைக் கற்பிப்பனவே யாகும். இங்ஙனங் கூறிப்போந்த அருணூல்கள் சைவத் திருமுறைகளாவன.

இனிச் சைவத் திருமுறைகளின் பண்பு, அவற் றின் ஆசிரியர்கள் அருணிலையுணர்ந்து துணியப் படும். திருமுறைகள் அருளிய ஆசிரியன்மார்கள் ஆளுடையபிள்ளையார் முதலாக அருண்மொழித் தேவர் ஈறாக இருபத்தெழுவராவரென முன்னர் உரைத்தாம். அவர்தம் நல்லிசைப் பாட்டுக்களும் கலைபுலவர் பாட்டுக்களும் சொல்வடிவு பாவடிவு களால் தம்முள் ஒருபுடை யொப்பனபோன்று காணப்படினும் சிறிதுந் தம்முள் ஒவ்வாதனவென் றறிக. திருமுறையாசிரியர்கள்யாவரும் இவ்வுலகில் கருவிகரணங்களோடிருப்பினும் சாக்கிரத்தில் துரி யாதீதத்தைப் புரிந்த சிவாநுபூதிச் செல்வர்களான சீவன்முத்தர்களாக விளங்கினவர்கள். ஆணவத் தோடுஅத்துவிதம் நீங்கித் சிவத்தோடத்துவித நிலை யில் நின்றவர்கள். சிவனாக நின்றமையால் திருவாய் மலர்ந்தபோதெல்லாம் வெளிப்போந்த திருப்பாக் கள் அருள்நாத வொலிவழிவந்த சிவவாக்குக்களே யாம். மற்றவர் வாக்குக்கள் மாயாநாதவொலிவழி வந்தவை. திருமுறைத் திருப்பாக்களைப் படித்தா லும் பக்கம்நின்று கேட்டாலும் உள்ளத்துணர்ச்சி எழுச்சிபெற்று, உலகினைமறந்து, உடலைமறந்து

தன்னுணர்வையும்மறந்து சிவபிரான் திருவுருவில் கலந்துநின்று, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஆனந்தத்திலழுந்தித் திளைக்குந் தன்மையில் விளங்கும் மெய்யன்பரை இன்றுங்காணலாகும். அஃதே அருட்பாவின் உயர்நிலையறிவிக்கும் சான்றாகும். இத்திருப்பாக்கள் சிவஞானம் கமழுமியல்பின. திருமுறையாசிரியர்கள் சிவஞானச் செல்வர்களாவர். அவர்களுள் முதல்நின்ற ஆளுடையபிள்ளையார் அம்மையப்பர்தந்த திருமுலைப்பாலுண்டு,

"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினி லோங்கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்"

எனவரும் திருவிருத்தத்தான் சிவஞானச் செம்மலாயினார் என்று அறியக்கிடக்கின்றது. இஃதேபோன்று மற்றைத் திருமுறையாசிரியர்களும் அவரவர் நிலைக்கேற்பத் திருவருள் பெற்று உண்ணின்ற அருளறிவு வெளிப்படத் திருமுறையாகும் தமிழ் வேதம் விரித்தார்கள். இங்ஙனம் போந்தமையால் தமிழ் வேதம் இறைவன் திருவாக்குக்களாகவே மதிக்கப்படுவன. வடமொழி வேதமும் அங்கங்களும் தம்மை விடுத்து ஈசன்றன்னடி யாயும் பழைய அடியார்வாயில் வந்தன என்று,

"விழையாருள்ள நன்கெழுநாவில் வினைகெடவேதமா றங்கம்
பிழையாவண்ணம் பண்ணியவாற்றாற் பெரியோரேத்தும்பெருமான்
தழையார்மாவின் றாழ்கனியுந்தித் தண்ணரிசில்புடை சூழ்ந்து
குழையார்சோலை மென்னடையன்னங் கூடு பெருந்துறையாரே"

எனவருந் திருஞானசம்பந்தரருளிய தேவாரத்தா னுணர்க. மேலும் அவர்தம்மைப் "பதியான்ஞான முனிவன்" என்றும், "எனதுரை தனதுரை யாகக்" கூறியமையான் சிவகரணம் பதியப் பெற்று விளங்கியபெரியார் என்று கொள்ளப்படும். எனவே சிவகரணத்தால் செய்யப்படுவனவெல்லாம் சிவன்செயலாம். அருள்விளக்கம் கண்ட அற்புதங் களெல்லாம் திருமுறையாசிரியர்கள் சிவகரணம் பதிந்து நின்ற சீலத்தால் நிகழ்ந்தனவேயாம்.

> "பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங்
> காலனையன் றேவிக் கராங்கொண்ட—பாலன்
> மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தங்
> கரணம்போ லல்லாமை காண்"

என்ற திருக்களிற்றுத் திருவெண்பாவான் சிவ கரணம் பதியப்பெற்றோர் இவ்வருள் விளக்கம் செய்யவல்லுநராவர். அவர்களே நிறைமொழி மாந்தர் எனப்படுவர். அவர்கள் மொழிந்தன மந்திரங்களேயாம். அருளிக் கூறிய மொழிகளும் வெகுண்டு கூறிய மொழிகளும் அவ்வப் பயன் களைத் தந்தருளுந் திறமுடையன. "மட்டிட்ட புன்னை" எனும் முதலுடைய ஆளுடையபிள்ளையார் திருப்பதிகம் என்புசாம்பரினின்றும் கண்ணுதற் கருணை வெள்ளமென பூம்பாவையாரைத் தோற்று வித்தது. "சுண்ணவெண் சந்தனச் சாந்தும்" என்னும் ஆளுடைய அரசுகள் திருப்பதிகம் மத வெறிகொண்டுவந்த யானையினின்றும் இடர்

தவிர்த்துக் காத்தது. "அத்திரமாவது அஞ்செழுத்துமே" என்னும் திரு அடி புத்தன் தலையை இடிகொண்டு நீக்கியது. "பேயடையா பிரிவெய்தும்" என்னுந் திருப்பாட்டு சிவஞானசூரியராகும் மெய்கண்டதேவநாயனுரையருளிற்று. இன்னன பிறவும் திருமுறைகளில் யாண்டும் காண்பதாகும். எனவே திருமுறைகள் படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய தெய்வத்தன்மையை விளக்கும் பண்புடையன.

இனித் திருமுறையோதுவோரை இறைநிலையடைவிக்கும் பண்புமுன்னர்க்குறித்தாம். ஈண்டு அதனைச் சிறிது விளக்குவாம். திருமுறைப் பதிகங்களை நவிலும்தோறும் நெஞ்சுருக்குந்தன்மை கண்கூடாகும். அன்பினைப்பெருக்கும் ஆற்றல் அவைகளுக்குண்டு. அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவராகும் கணநாதர் திருமுறைகளை எழுதியும் படித்தும் இறைவனடியைச் சார்ந்தார் என்பது வரலாறு. அங்ஙனம் ஓதுவோரிடத்துப் பரமனும் நனிவிருப்பன் என்று பாராட்டப்படுகிறது. "மூவருள் பதிகம் ஒன்றொன்றே யினிதினுரை செய்ய அன்பாற்கேட்ட" இராசராசசோழனும் திருமுறைகள்பால்வேட்கையுடையனாய் அவைகளைச்சிதம்பரத்தினின்றும் வெளிப்படுத்திய வரலாறும் திருமுறைகளின் சிறந்தபண்பினை யறிவிக்கும். காமுகனாயினான் தன் வாய்ச்சொல்லினும் தன்னால் விரும்பப்பட்ட காமக்கிழத்தியர் வாய்ச் சொல்லிலே மிகவும் பற்றுடையவனாய் மகிழ்ச்சியடைவன். அதுபோலச்

சிவபிரானுந் தமது வாய்ச்சொல்லாகிய வேதாகமங்களினும் தம்மால் விரும்பப்பட்ட அடியவர் வாய்ச் சொல்லாகிய தேவாரம் முதலிய திருமுறைகளிலே மிகவும் பற்றுடையராய் மகிழ்ச்சியடைவர். அது "ஒழித்திடும்பவப் பகைவிரைந் துள்ளமே யோது மூதுணர்வோர்முற், பழிச்சுபாடலையரற்கவைவிடர்க் கிளம் பாவையருரை போலுங், கழித்திடேலுபசார மென்றிதனை நீகட்டுரையெனக்கொள்வாய், விழித்து மாரனையெரித்ததேவருள்பெறும் விருப்பினர் விருப் பீதே" என்னும் வைராக்கிய சதகச் செய்யுளாற் பெறப்படும். மேலும், திருமுறைத் திருவாக்குக்கள் பிறவிப் பிணிக்கு மருந்தென,

"கேவல ஞானக் கிழவன் ஆளுடைப்
பிள்ளை நாவரசு பேராரூரன்
அரதன வாக்கியன் அருந்தமிழ் மூலன்
சீவன்முத்தர் திருவாய் மலர்ந்த
நூல்பவ நோய்க்கு நுண்ணிய மருந்தே"

எனவரும் சத்தியஞானபோத ஆசிரியப்பாவானும் அறியலாகும். "வீட்டிற்கு வாயிலெனுந் தொடை சாத்து சொல்வேந்த!" என்று திருமுறைகள் முத்திகொடுக்குமியல்பினைச் சிவப்பிரகாச சுவாமிகள் போற்றுகின்றனர். நம்பியாண்டார்நம்பிகளும் இக்கருத்தையே,

"பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனும் தோற்றோணி கண்டீர்—நிறையுலகில்

பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்"

என்னும் திருப்பாட்டில் வலியுறுத்தினர். எனவே திருமுறைகள் மெய்தரு ஞானத்தீயாகும். உயிர்கள் உள்ளத்துள்ள கள்ளத்தை மாற்றுவிக்கும்; அங்ஙனம் கள்ளங்கழிய நின்றார் காயத்துள் இறைவனைக் கலந்து நிற்கச்செய்து அவனையே உள்ளத்து ளொளியுமாக்குவிக்கும் இயல்புடையன. மூந்தை வினைமாய்த்து முத்தியைக் கூட்டும் சீருடையன.

## திருமுறைகளின் வகை

வெள்ளத்தைச் சடையில்வைத்த வேதகீதனுகும் சிவபிரானது சீருடைக் கழல்கள் அடைதற்கு மேம்படு சாதனமாகும் திருமுறைகள் பன்னிரண்டாகத் தொகுக்கப்பெற்றன. இவற்றினடைவின் சிறப்பைப் பின்னருரைக்குதும். உலகின் புற இருளைப்போக்கும் ஆதித்தர்கள் பன்னிரண்டானுற் போல் உயிர்களின் அக இருளைப் போக்கவும் பன்னிரண்டு சிவஞான சூரியர்களாகும் பன்னிரண்டு திருமுறைகள் போந்தனபோலும். பன்னிரண்டு ஆதித்தர்களும் காலவேறுபாட்டால் வெப்பம் மிகுதியையும் குறைவினையுமுடையார்போல திருமுறைகளின் அளவும் பெருக்கமும் சுருக்கமுமாகவும் விளங்குந்தன்மையாயது. பன்னிரண்டாக வகுக்கப்பட்ட திருமுறைகளுள் முதன் மூன்று

திருமுறைகள் ஆளுடையபிள்ளையாகும் திருஞான சம்பந்தராலருளப்பட்டன. நான்கு ஐந்து ஆறு திருமுறைகள் அருளியவர் ஆளுடைய அரசுகளாகும் திருநாவுக்கரசராவர். ஆளுடையநம்பிகளாகும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஏழாந் திருமுறையை யருளினார். திருவாசகம், திருக்கோவையார் என்பன எட்டாந் திருமுறையாகும். அவை ஆளுடைய அடிமைகளாகும் மணிவாசகனால் அருளப்பட்டன. ஒன்பதாந் திருமுறையென்பது திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் அருணூல்கள். அது ஒன்பதின்மரால் வெளிப்போந்தது. அவர்கள் சிவாநுபூதிச் செல்வர்களென அவர்தம் திருப்பதிகங்கள் அறிவிக்கும். திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், பூந்துருத்திநம்பிகாடவநம்பி, புருடோத்தமநம்பி, சேதிராயர் என்பன அவர்களது திருப்பெயர்களாகும். திருமூலதேவர் அருளிய திருமந்திரம் பத்தாந்திருமுறை. திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரம் முதலாகஅமைந்த நாற்பது பிரபந்தங்களடங்கிய தொகுதியைப் பதினொராந் திருமுறையாக வைத்தனர். குன்றைமுனியாகும் சேக்கிழார் சுவாமிகள் அருளிய திருத்தொண்டர்புராணம் பன்னிரண்டாந் திருமுறையெனப்படும். இத் திருமுறைகள் ஏறக்குறைய 18090 திருப்பாட்டுக்களையுடையன; இருபத்தேழாசிரியர்களால் அருளப்பட்டன. பின்னர்தரும் பட்டி ஆசிரியர் திருப்பெயர்களும், நூத

லிய நூற்பெயரும், திருப்பாட்டுக்களின் தொகையை யும் அறிவிக்கும். "இத்திருமுறைகள், உயிர்களின் அறிவில் நீங்காது தங்கியுள்ள திருவருளாகிய சிவ ஞானத்தின் அபர தடத்த வடிவமாய்ச் சிவப் பேற்றை விழையும் நல்லோர் பலராலும் சிவன் அருண்மெய்யினை உணர்வதற்குப் பரமப் பிர மாணங்களாகக் கொள்ளப்படுவனவாய், ஞால மளந்த மேன்மைத் தெய்வச்செந்தமிழ்ப் பயனுய் உள்ளவை". கற்றூர்களேத்தும் அருட்கருவூலமாகிய திருமுறைகளைச் சோழவளநாட்டினையாண்ட முதலா வது இராசராசனுன அபயகுலசேகர சோழர்காலத் தில் சிற்சிலரே யோதினராயினும் பெரும்பாலும் மக்களுணராவகை அவை மறைந்திருந்தன. அரச ரும் தன்பால் எய்திய அன்பர்களுள் சிலர் மூவர் பதிகம் ஒன்றொன்று இனிதினுரைசெய்ய அன்பாற் கேட்டு, நைந்த மனமுடையவராய்க் கசிந்துருகினர். மூவர் திருப்பாக்கள் எங்குள்ளனவெனத் தேடினர். எங்குமிலாமையால் திருவருளையே வேண்டிநின்றூர். திருவருளும் அன்பராகும் அரசன் வேண்டியதனைக் கைகூட்டிற்று. திருநாரையூரில் பொல்லாப்பிள்ளை யாரின் திருவருளை நம்பியாண்டார் நம்பிகள் என் னும் ஆதிசைவச்சிறுவர் அதிசயமுறப்பெற்றூரென் றறிந்தார். அவரே ஊனினையுருக்கி யுள்ளொளி பெருக்கும் திருப்பாடல்களைப் பெறுதற்குத் துணை யாவர் என்று கருதினர். பொல்லாப்பிள்ளையாரை வணங்குதற்பொருட்டுப் பல்வகைப்பழங்கள், தேன், அவல், எள்ளுண்டை முதலியனகொண்டு நால்

வகைச் சேனைகள்சூழ் திருநாரையூருக்குப் போந் தருளினர். நம்பிகளைக்கண்டு பரவசமுற்று அவர் திருவடிகளில் வணங்கிக்கொண்டுவந்த பழங்கள் முதலியனபரப்பிவைத்து, பொல்லாப்பிள்ளையாரை அமுதுசெய்விக்கவேண்டினர். அங்ஙனமே நம்பிகள் அவைகளைச் சுத்திசெய்து வேண்டுவார் இடர்தீர்க் கும் விநாயகப்பெருமானை வேண்ட, பிள்ளையாரும் துதிக்கையை நீட்டிப் படைக்கப்பட்ட பொருள்க ளெல்லாவற்றையும் திருவமுது செய்தருளினர்.

அதுகண்ட சோழவரசர் மனமகிழ்ந்து நம்பி களை மீண்டும் வணங்கி, 'சமயகுரவர் மூவர்கள் அருளிச்செய்த தேவாரத் திருப்பாக்களும் திருத் தொண்டர்கள் வரலாறுகளும் இந்நிலவுலகில் விளங் குதல் வேண்டும்; இவையின்மை எம்மைத் துன் புறுத்துகின்றது; இதனை நீக்கியருள வேண்டும்;' என்று, விண்ணப்பித்தார்.

நம்பியாண்டார்நம்பிகள் அரசரது மாபெரும் வேட்கையைக் கண்ணுற்று, "இவருறு துயரத் திற்குத் தீர்வுதேர்வேன்" என்று மனத்திலுன்னித் தம்மையாண்ட அருண்மூர்த்தியாகும் பிள்ளையாரை வணங்கி, 'எம்பெருமானே! தேவாரத்திருப்பாக்கள் இருக்குமிடத்தையும், திருத்தொண்டர்வரலாறுகளை யும் எனக்கு அருளிச்செய்யவேண்டுமென்று விண் ணப்பித்தார். பிள்ளையார் "நம்பீ, சிதம்பரத்தில் ஆனந்தக்கூத்தர் அம்பலத்தின் புறக்கடையின்

பக்கத்திலே மூவர் முதலிகள் கைகளின் அடையா ளத்தையுடைய அறையினுள்ளே தேவாரத் திருப் பாக்கள் உள்ளன'' என்றருளிச்செய்து, பின்பு திருத்தொண்டர்களுடைய வரலாறுகளையும் உரைத் தருளினர். நம்பிகள் இவையாவும் மனத்துற வமைத்து மீண்டும் அபயகுலசேகர மன்னர்பால் சார்ந்து அறிந்தவை முற்றும் அறிவித்தார். மன் னரும் பெருமகிழ்ச்சியுடனே 'இவை பெறுவேன்' என்றெழுந்து பொல்லாப்பிள்ளையாரை வணங்கிப், புறம்போந்து நம்பிகளோடு சிதம்பரத்திற்கெழுந் தருளினர். ஆங்குச் சென்றதும் பொன்னம்பலத் திற்குச் செல்வாராய்த் திருக்கோயிலுக்குட்சென்று தில்லைவாழந்தணர்களை நோக்கி, "நாரையூர் நம்பி கள் அருளால் மூவர்முதலிகள் அருளிய அமிழ்தினும் இனிய செந்தமிழ்த் தேவாரப்பாக்கள் கனகசபை யின் புறக்கடையின் பக்கத்தில் ஓரறையினுள்ளே உள்ளனவெனப் பொல்லாப்பிள்ளையார் அருள அறிந்தேன்; அவைகளையெடுத்துஉலகிற்கு அருளல் வேண்டும்'' என்றுதெரிவித்தார். தில்லைவாழந்தணர் கள் மன்னரை நோக்கி, வேந்தரேறே! தேவார அருட்பாடல்களை வைத்தருளிய சைவத் திருநெறித் தலைவர்கள் மூவரும் எழுந்தருளிவந்தால் அவ்வறை திறக்கும் என்றார்கள். மதிநுட்பஞ்செறிந்த மன் னரும் 'அங்ஙனமேயாக' என்றுவிடைதந்து பொன் னம்பலக் கூத்தரைக் கண்டு வணங்கி, தம்விடுதியுள் அமர்ந்தனர். கூத்தருக்குச் சிறப்புவிழா செய்ய மனங்கொண்டு அவர் தமக்கும் மூவர்முதலிகள்

படிவங்கட்கும் திருமுழுக்கு முதலியன செய்வித்து மூவரையுந் திருவீதியிலே திருவுலாவருவித்துக் கனகசபையை வலஞ்செய்வித்துத் திருமுறைகள் இருக்கும் அறையினெதிரே கொணர்வித்து நிறுத்திக்கொண்டு, அரசர் தில்லைவாழந்தணர்களை நோக்கி, "சைவத் திருநெறித்தலைவர் மூவரும் வந்துவிட்டனர் இனி அறையைத் திறக்கலாமே" என்றார். தில்லைவாழந்தணர்கள் சோழவரசரது அறிவை வியந்து அறைதிறக்க உடன்பட்டனர்.

பின்னர்த் திருமுறையறையின் திருக்கதவந் திறக்கப்பட்டது. சோழவரசர் திருமுறைகளை வன்மீகமூடியிருப்பக்கண்டு மனம்நொந்தார்; அவைகளைப் புறத்தேகொண்டேகி எண்ணெய்சொரிந்து மண்ணீக்கித் திருவேடுகள் பலவும் பழுதுறக்கண்டார்; இதற்கென்செய்வது என்று கவலைகொள்ள "இக்காலத்திற்கு வேண்டுவனவாய தேவாரத் திருப்பதிகங்களை வைத்துவிட்டு மற்றவை செல்லு மண்மூடச்செய்தோம்" என்று அசரீரியாகக் கேள்வியுற மனக்கவலைதீர்ந்தார். பின்பு அத்திருவேடுகளனைத்தையும் கொண்டுசென்று நம்பியாண்டார்நம்பிகள்பால் சேர்ப்பித்து அவற்றை யடைவுசெய்தருளித் தருகவென சோழவரசர் விளம்பினர். நம்பிகளும் அவற்றையாராய்ந்து திருமுறையடைவுசெய்தனர். திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத்திருப்பதிகங்களை மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய தேவாரத் திருப்பதிகங்களை

மூன்று திருமுறைகளாகவும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரத் திருப்பதிகங்களை ஒரு திருமுறையாகவும் வகுத்தருளினூர். மற்ற திருப்பாடல்களையும் அடைவுசெய்வாராய், மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம் திருக்கோவையார் என்னுமிரண்டையும் எட்டாந் திருமுறையாகவும், திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மர் அருளிய திருவிசைப்பா திருப்பல்லாண்டுமாகிய இருபத்தொன்பது திருப்பதிகங்களையும் ஒன்பதாந் திருமுறையாகவும் திருமூலநாயனூர் அருளிய திருமந்திரத்தைப் பத்தாந்திருமுறையாகவும், திருவாலவாயுடையார் திருமுகப்பாசுர முதலிய பிரபந்தங்களைப் பதினேராந் திருமுறையாகவும் வகுத்தருளினூர். அரசர் வேண்ட தாமருளிய திருத்தொண்டர் திருவந்தாதி, திருஞானசம்பந்த சுவாமிகள்மீது திருவந்தாதி முதலிய பிரபந்தங்கள், திருநாவுக்கரசுகள்மீது திருவேகாதசமாலை ஆகிய பிரபந்தங்களைப் பதினேராந் திருமுறையில் சேர்த்தருளினூர்.

இங்ஙனம் வகுக்கப்பட்ட திருமுறைப்பாடல்கள் இசைகூடும் வகையால் பாடப்பெறின் திருவருள் சேர்வது திண்ணம். "பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக, மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன்" என்று பரமனைப் போற்றுவார் திருஞானசம்பந்தப் பெருந்தகையார். எனவே இத்திருமுறைகட்குப் பண்ணடைவுசெய்ய

ஒருப்பட்டனர் நம்பிகளும் சோழவரசரும். இரு வரும் பல சிவனடியார்கள்சூழ திருவெருக்கத்தம் புலியூருக்குச் சென்றனர் இம்மாபெருஞ்செயல் இறைவன் திருவருளின்றிக் கூடுதலருமையாதலின் இடையறாப் பேரன்புபூண்ட இவர்கள் திருக்கோயி லுக்குட் சென்று வணங்கினர். வேண்டினர். வேண்டியாங்கருள்செய்யும் பரமரும் "அன்பர்களே, திருநீலகண்டப்பெரும்பாணன் மரபிலே பிறந்த பெண்ணொருத்திக்குப் பண்களையருளிச்செய்தோம். என்று அசரீரியாக விளம்பினர். இதுகேட்ட அரசரும் நம்பிகளும் மனமகிழ்ந்து அவ்வருண்மக ளிரை வரச்செய்து அவளிடத்தே பண்களைக்கேட் டுப் பரவசமானூர்கள். அவ்வம்மையாரோடு தில்லைக் குத் திரும்பி கனகசபைக்கு முன் சென்று தேவாரத்திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவு வகுத் தார்கள். அதன்பின் சோழமன்னர் பதினொரு சைவத் திருமுறைகளைச் செப்பேடுசெய்து, நம்பி யாண்டார்நம்பிகளை வணங்கி விடைபெற்று, திருவா ரூருக்குச்சென்று தியாகேசர் சந்நிதியில் ஏற்றுவித் தனர். அவை தமிழ்நாடெங்கும் திருக்கோயில் களில் பாடும்படி ஏற்பாடு செய்தனன். இவ்விராச ராச மன்னனும் தஞ்சைப்பெருங்கோயிலில் திரு முறைப்பாடுவோராக நாற்பத்தொன்பதின்மரை ஏற்பாடு செய்தமை கல்வெட்டுக்களால் அறியப் படுகின்றது. திருமுறைகள் வகுத்த வரலாறு திரு முறைகண்ட புராணமென்பதனல் அறியலாகும். சேக்கிழார் சுவாமிகள் அருளிய திருத்தொண்டர்

புராணம் அநபாயச் சோழரெனும் இரண்டாவது குலோத்துங்கச் சோழரால் பன்னிரண்டாந் திருமுறையாகச் சேர்க்கப்பட்டது.

இத் திருமுறைகளின் அடைவின் மாண்பை யுணர்தற்குமுன் திருமுறையாசிரியர்கள் வரலாறும், காலமும், அக்காலத்தின் தேசநிலையும், அவர்கள் செய்த திருத்தொண்டின் இன்றியமையாமையும் கருதற்பாலனவாகும்.

## திருமுறையாசிரியர்கள் வரலாறு

### 1. திருஞானசம்பந்தர்:

சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியவை. அவர்தம் வரலாற்றைப் பன்னிரண்டாந் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணத்துள் தெய்வப்புலமைவாய்ந்த சேக்கிழார் சுவாமிகள் விரித்துரைத்தனர். ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியிலும் ஒரு சிறிது உரைக்கப்படுகிறது. திருவிளையாடற் புராணங்களிலும் காணலாகும். திருஞானசம்பந்தர் விளங்கிய காலம் கி. பி. ஏழாவது நூற்றாண்டாகும். போதிய சான்றுகள் வரலாற்றாசிரியர்களால் அறிவுறுத்தப்படுகின்றன. இவர் காலத்தில் விளங்கிய பேரரசர்கள் பாண்டியரும் பல்லவரும் ஆவர். நரசிம்மவர்மன் (630-668)

என்பவன் பல்லவனுவான். மாறவர்மன் அரிகேசரி என்னும் நெடுமாறன் என்பான் (கி. பி 640-680) பாண்டியனுவான். சோழவரசர் சிற்றரசராக விளங்கினர். அவர் மாறவர்ம பாண்டியருக்கு மங்கையர்க்கரசியாரை மணஞ்செய்வித்துப் பெருமையடைந்தவர். இப்பாண்டியர் "நின்றசீர் நெடுமாற நாயனுர்" என்று பெரியபுராணத்துள் பாராட்டப்படுகிருர். இவரைச் சுந்தரபாண்டியன் எனவும், கூன்பாண்டியன் எனவும் திருவிளையாடற்புராணம் கூறும். சேரரும் சிற்றரசர்களாய்ப் பாண்டியருக்கடங்கி வாழ்ந்துவந்தனர். மற்றும் அறுபான்மும்மை நாயன்மார்களுள் சிலர் அவரோடு அளவளாவியிருந்தமை வரலாற்றுல் அறியப்படும். திருநாவுக்கரசர், முருகர், திருநீலநக்கர், திருநீலகண்டயாழ்ப்பாணர், சிறுத்தொண்டர், குங்கிலியக்கலயர், நெடுமாற நாயனுர், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் என்னும் நாயன்மார்கள் அவரது காலத்தில் விளங்கியவர்கள்.

இனித் திருஞானசம்பந்தர் திருவவதாரஞ் செய்தற்கு முன்னிருந்த தமிழகத்தின் சமயநிலையைச் சிறிது கருதுவோமாக. பல்லவராஜ்யத்தில் சமண சமயம் ஓங்கிநின்றது. மேலே குறித்த நரசிம்மவர்மன் தந்தை மஹேந்திரவர்மன் சமண சமயம் மேற்கொண்டவனுய்ச் சமண அடிகளார் சூழ அரசாண்டு வந்தனன். அவன் திருநாவுக்கரசர் மெய்ப்பத்திவிளக்கத்தால் சைவனுக மாறினுனென

கல்வெட்டுக்களால் அறியப்படுவகும். அதனல் சமணர் ஆதிக்கம் பல்லவர் நாட்டினில் சற்றுக் குறைந்து நின்றதெனினும் பாண்டிநாட்டினில் மிகுதியுற்றது. மாறவர்மனும் சமணனுக விளங்கினன். தன்கீழ் வாழ் குடிகளையும் சமண சீலங்களை மேற்கொண்டொழுகும்படி துணைசெய்தனன். குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் கரந்து சைவராக வொழுகிவந்தனர். சோமசுந்தரப்பெருமான் திருக்கோயிலும் மூடப்பட்டது. பூசைகள் தப்பின. ஆங்கு மறைந்துசென்று வழிபடும் அன்பர்களும் சிலரேயாவர். சோழ சிற்றரசர்கள் சைவராயினும் சமணசமயப்பெருக்கைத் தடைசெய்தும் செய்யாமலும் வாழ்ந்தனர். எனவே சிவவழிபாடு குன்றி நின்றது. வேதநெறி ஓங்கவில்லை. சைவநெறியும் தழைக்கவில்லை. இறைவன் பேரருட்டிறத்தை அறிவித்த கண்ணனும் பகவத்கீதையில் "என்று அதர்மங்கள் தலையோங்கி அறம்குன்றுகிறதோ அன்று அறத்தை நிலைநிறுத்தும் வண்ணம் யுகந்தோறும் பிறக்கின்றேன்" என்றருளினர். அங்ஙனம் அடியார்களும் சுருதியினெறிநிற்றற்கும், அவமாயின வொழிதற்கும் திருவவதாரஞ் செய்வதியல்பு. வேதநெறி தழைத்தோங்கவும், சைவத்துறை விளங்கவும்,

"அவம்பெருக்கும் புல்லறிவின் அமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்படநல் லூழிதொறுந்
தவம்பெருக்குஞ் சண்பையிலே தாவில்சரா சரங்களெல்லாம்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதாரஞ் செய்தார்"

எனவும், சேக்கிழார் சுவாமிகள் திருஞானசம்பந்தர் திருவவதாரத்திற்குக் காரணம் உரைத்தருளினர். மேலும் ஞானபோனகரின் தந்தையார் சிவபாத விருதயர் மகப்பேறு பெறுதற்குப் "பரசமயம் நிராகரித்து நீறாக்கும், புனிமணிப்பூண் காதலனைப் பெறப் போற்றுந் தவம்புரிந்தார்" என்று கூறப் படுகின்றது. இவை தமிழகத்தில் சமண்பெருகிச் சைவங்குன்றி இருந்தமையை நன்கு விளக்குவதாகும். எனவே சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதாரம் அக்காலநிலைக்கேற்ப இன்றியமையாததாக விருந்தது.

தமிழகம் செய்த தவப்பயனைய்ச் சோழநாட்டினில் பன்னிரு பெயர்களுடையதாகும் சீகாழிப் பதியில் அந்தணர்குலத்தில் சிவபாதவிருதயருக்கும் பகவதியம்மையாருக்கும் சிவபெருமான் திருவருளால் மகவாகத் திருஞானசம்பந்தர் திருவவதாரஞ் செய்தனர். ஈராண்டுநிரம்பி மூன்றுமாண்டு தொடங்கிய பின்னொருநாள் பண்டு பரமர்தாள் வழிபட்டமையை நினைவுற்றழுதார்; மற்றொருநாள் தம் தந்தையார் நீராடப் பிரமதீர்த்தத்திற்குச் செல்லுங்கால் தொடர்ந்துசென்று அழுதலும் அவர் பன்முறை பரிவால் தடைசெய்தும் பயன்பெறமல் அழைத்துச்சென்றார். பிள்ளையாரைக் கரையின் மீதிருத்தித் தான் நீராடச்சென்றார். நீராடிமுடிந்ததும் நீரினில் மறைந்துநின்று அகமருட ஜபம் செய்தனர். தந்தையாரைக்காணது அங்குமிங்கும் பார்த்

திருந்தகண்கள் அருகிலுள்ள திருத்தோணியப்பர்த் திருக்கோயிலின் சிகரத்தைக் கண்ணுற்றன. முன்னைத்தொடர்பின் நினைவு வேகமுற்றெழுந்தது. "அம்மே யப்பா" என்று சிகரம்நோக்கியழுதனர். அழுகையைக்கேட்டதோணியப்பரும் உமாதேவியாரோடு வானவீதியில் இடபத்தின்மீது தோன்றினர். தம்நாயகியாரைத் தனங்களினின்றும் பால்சுரந்து ஞானத்தைக்குழைத்து உண்பிக்குமாறு அருளினர். அம்மையாரும் மாநிலத்துப்போந்து பிள்ளையார் கண்ணீர் துடைத்து அவருக்குப் பொன்வள்ளத்தில் ஞானவமுதினையூட்டினர். ஞானப்பாலுண்ட பிள்ளையார் உவமையிலாக் கலைஞானமும் உணர்வரிய மெய்ஞ்ஞானமும் பெற்றாராய்ச் சிவஞான சம்பந்தராயினர். ஆளுடையநாயகியும் விட்டு நீங்கினர். அங்ஙனம் பிரிந்த அம்மையாரையும் விடைமேலிருந்த பெருமானையும் கண்டுகொண்டே காதற் கசிவொடும் பேருணர்விற்பொலிகின்ற பிள்ளையாரைப் பிரமதீர்த்தத்தினின்றும் வெளியேறிய சிவபாதவிருதயர் கண்டு, "யாரளித்த பாலடிசில் நீயுண்டது" என வெகுள்வாராய் எச்சில்மயங்கிடவுமக்கீதிட்டாரைக் காட்டென்று கையில் சிறுமாறு கொண்டோச்சினர். சிவஞானச் செம்மலும் தம் சிறுகாலைத் தூக்கிநின்றே சுட்டியறியமுடியாத பரம்பொருளைச் சுட்டிக்காட்டி 'தோடுடையசெவிய' னெனும் திருப்பதிகத்தால் சிவபெருமானது அடையாளங்களைச் சாற்றி "இங்ஙனம் என்னைச் செய்தவன் இவனன்றே" என்றேயருளினர். தந்தையார்

வியந்து பிள்ளையார் திருவருள்பெற்றமை யுணர்ந்தார். இவ்வற்புதச் செய்தி ஊரவர் அறிந்தனர். யாண்டும் விழாக்கொண்டாடினார். சீகாழியர்தவமே என்று பிள்ளையாரைப் போற்றினார்கள். கவுணியர் கோத்திரக்குலத்தில் வந்தவராதலின் கவுணியகுல தீபமே எனச் சுற்றத்தவர் வாழ்த்தினர். இங்ஙனம் பல வாழ்த்துக்களெடுப்ப, தந்தையார் பின்செல்ல, பிள்ளையார் தோணிபுரத்தீசன் திருமுன் சென்று வணங்கி, தந்தையார் தந்தோளின்மேல் கொண்டு செல்ல தம் இல்லமடைந்தனர். அன்றுமுதல் தமிழ் நாட்டவர் நல்வினைகாரணமாக சிவபெருமான் திருக்கோயில்களுக்குச் சென்று வழிபடும் நியமமே கருமமாகக்கருதினார். ஆங்காங்குச்சென்று திருப்பதிகங்கள் பாடிப் பல அற்புதங்களாகும் அருள் விளக்கங்களை ஞாலத்தாருய்யக்காட்டியருளினர். பொற்றாளம் பெற்றது; முத்துச்சிவிகையேறியது; முயலகன் நோய் அகற்றியது; முத்துப்பந்தர்பெற்றது; உலவாக்கிழிபெற்றது; பாம்பின் விடம்நீக்கியது; வாசி தீரக்காசுபெற்றது; திருமறைக்காடு கதவம்பிணித்தது; கூன்பாண்டியன்மீது வெப்புநோய் சேரச்செய்தது; திருநீற்றின் பெருமையை விளக்கியது; அனல்புனல் வாதங்களில் வெற்றிபெற்றது; நாவடிகோலாக ஓடம்போக்கியது; புத்தன் தலையை யிடியால் இடரச்செய்தது; காயாதபனையைக் குலைகள் காய்க்கும்படிச்செய்தது; என்பு சாம்பரினின்றும் பூம்பாவையை யெழுப்பியது; சிற்சோதியிற் கலந்தது என்பன அவர் நிகழ்த்திய அற்புதங்களாகும்.

இறுதியிற் கூறிய சிற்சோதியிற் கலந்தது என்பது ஆச்சாள்புரம் எனப்படும் திருநல்லூர்ப்பெருமணம் எனும் தலத்தில் திருமணம்பூண்ட பிள்ளையார் திருக்கோயிலுக்குச் சென்று சிவபிரானைவணங்கி "இனி உன்பாதமெய்ந்நீழல்சேரும் பருவமீதென்று" பாடினார். சிவபிரான் திருவருளால் திருக்கோயிலைச்சுற்றி பெருஞ்சோதி தோன்றியது. அதனடுவே ஒரு வாயிலும் தோன்றியது. "நீயும், உன் மனைவியும் திருமணங்காணவந்த யாவரும் இதன்கண் புகுந்து வருக" என்ற திருவாக்கும் தோன்றியது. பிள்ளையாரும் "காதலாகி" என்னும் நமச்சிவாயத் திருப்பதிகமருளி யாவரையும் உட்செல்லுமாறு ஏவித் தானும் தன் துணைவியுமாக அச்சோதியையடைந்து அதனுட் புகுவார் "போதநிலை முடிந்தவழி புக்கொன்றியுடனானார்." இங்ஙனம் சிவபிரான் திருவுருவாகும் சோதியிற்கரந்தது வைகாசித்திங்களிற் பூசனன்னாள் என்று குறிக்கப்பட்டுள்ளது.

இனி, அற்புதங்களைப்பற்றிச் சிறிது கருதுவோமாக. இவை திருவருள் விளக்கத்தை இவ்வுலக மக்கட்கு அறிவிப்பன. திருஞானசம்பந்தரதுகாலத்தில் விளங்கிய மக்கள் சமணசமயிகளது சமயபோதனைகளைப்பயிற்சியுடையராய் வீடும் ஞானமும் பெறக் கருத்துடையராய் உடலைவாட்டி வருத்தும் விரதங் கொண்டொழுகினர். அவர்கட்கு "ஊனைவாட்டித் திரிவதாற் பயனில்லை. சிவபிரானைநாடி வழிபடுவதால் ஞானமும் திருவருள் விளக்கமும் கைகூடும்."

என்பதனை வலியுறுத்திக் காட்டுமுகத்தால் இவ்வற்புதங்கள் அவர்களைச் சமணநெறியினின்றும் நீங்கிச் சிவவழிபாட்டு நெறியைக் கடைபிடிக்கத் துணை செய்தன. இவ்வுண்மை,

“வீடு ஞானமும் வேண்டுதிரேல் விரதங்களால்
வாடி ஞான மென்னவது மெந்தை வலஞ்சுழி
நாடி ஞானசம்பந்தன செந்தமிழ் கொண்டிசை
பாடு ஞானம் வல்லாரடி சேர்வதுஞானம்”

எனவரும் பிள்ளையார்த்திருப்பாட்டானுணரலாகும். மேலும், அற்புதங்களைக்கண்ட மக்கள்யாவரும் திருவருளால் பெறும்பயனை யறிந்தேனும் சிவபிரானுக்குத் தொண்டுபட்டு வழிபடமுந்துவரன்றோ. அவை சைவநெறி நின்றோர் இம்மைப் பயன்களை மிக்க எளிமையில்பெற்ற வியல்பினையும், இயலாது என்று கூறத்தக்கவைக ளெல்லாவற்றையும் கூட்டுவித்து நின்ற வியல்பினையும் திருவருளால் மெய்ப்பித்தன. திருஞானசம்பந்தருக்குப் பொற்றாளம், முத்துச் சிவிகை முதலியன இம்மைப்பயனாக நேர்ந்தன. அவற்றைத் திருவருளேயென்று போற்றி அவர் ஏற்றுக்கொண்டார். பிறநிகழ்ச்சிகள் உலகின்கண்ணுள்ள உயிர்களுக்கு இன்னல்தீரத் திருவருளை அவர்பாற்செலுத்தி உய்வித்தார். எனவே பேரன்புடையார்கள் அற்புதங்களால் சமயநிலையில்மக்களை உறுதிகொண்டொழுகும்படிச் செய்வித்தனர்.

## 2. திருநாவுக்கரசர் :

சைவத் திருமுறைகளுள் நான்கு ஐந்து ஆறும் திருமுறைகள் திருநாவுக்கரசு சுவாமிகளால் அருளப்பட்டன. அவர் திருஞானசம்பந்தர் காலத்தவர். அவர்களோடு பல சிவத்தலங்களுக்குச்சென்று சிவபிரானை வழிபட்டவர். அவர்பால் பேரன்புடையவர். திருஞானசம்பந்தர் உலவாக்கிழியைத் திருவாவடுதுறையில் சிவபிரான் திருவருளால் பெற்றமையை,

" மாயிரு ஞாலமெல்லா மலரடி வணங்கும்போலும்
பாயிருங் கங்கையாளைப் படர்சடை வைப்பர்போலும்
காயிரும் பொழில்கள்சூழ்ந்த **கழுமல வூரர்க்கம்பொன்**
**ஆயிரங் கொடுப்பர்போலு** மாவடு துறையனாரே "

என்ற திருப்பாட்டில் அப்பமூர்த்திகள் குறித்துள்ளனர். இப்பாட்டு ஓர் அகச்சான்றாயினும், இருவரும் ஒருகாலத்தவர், ஒன்றாகத் தலயாத்திரை செய்து திருவருள்விளக்கம் காண்பித்தவர் என,

* * * திருமிழலை
இருந்துநீர் தமிழோடிசை கேட்குமிச்சையால்
காசு நித்தம் நல்கினீர் "

எனவும்,

" நேசமுடை அடியவர்கள் வருந்தாமை அருந்த
நிறைமறையோர் உறைவீழி மிழலைதனில் நித்தல்
காசருளிச்செய்தீர் "

எனவும் சுந்தரர் குறித்தமையானுணர்க. அப்பர் காலத்தில் அரசாண்ட பாண்டிமன்னர்கள் பாண்டியன் கடுங்கோன், மாறவர்மன் அவனி சூளாமணி, செழியன்சேந்தன், கூன்பாண்டியனுகும் மாறவர்மன், அரிகேசரியாவர். பல்லவர்கள் சிம்மவிஷ்ணுவும், அவன் மகன் மஹேந்திரவர்மனும் அவனது மகன் நரசிம்மவர்மனும் ஆவர். சோழரும் சேரரும் சிற்றரசர்களாக விளங்கினர். அப்பர் காலத்தில் விளங்கிய நாயன்மார்கள் திருஞானசம்பந்தர், குங்குலியக்கலயர், முருகர், திருநீலநக்கர், திருநீலகண்டயாழ்ப்பாணர், அப்பூதியடிகள் ஆகிய இவர்களென்றறியப்படும். திருஞானசம்பந்தர் திருவருள்பெற்று உலகறியவந்தநாளில் பாண்டிநாட்டில் சமண சமயம் ஆதிக்கங்கொண்டிருந்தது. பல்லவர்நாட்டில் சமணர் ஆதிக்கங் குறைந்துநின்றது. இங்ஙனம் குன்றியதற்குக் காரணம் பல்லவர்நாட்டையாண்ட மஹேந்திரவர்மன் (கி. பி. 615-630) திருநாவுக்கரசரால் சைவனுகிச் சிவவழிபாட்டை மேற்கொண்டமையேயாகும். ஆயினும் அப்பர் திருவவதாரஞ் செய்தகாலத்துச் சமண்சமயம் உயர்நிலையில் இருந்திருக்கலாம். மஹேந்திரவர்மனது தந்தை சிம்மவிஷ்ணு பல்லவநாட்டை புதுக்கோட்டைவரை தன்னுட்டினை விரிவுசெய்தனன்; பலபோர்கள் இதன் பொருட்டு நேர்ந்தன; திருமுனைப்பாடிநாடு ஆண்ட மலாடரும் வன்மைகுன்றி நின்றனர். தாம் வெற்றி கொண்ட பின்பு சிம்மவிஷ்ணு அமைதியை நாடெங்கும் நாட்டினன். கற்றவர் தம்மோடு கலந்துறவு

கொண்டான். வடமொழியும் தென்றமிழ்மொழியும் வளர்ச்சியுற்றன. மக்களுள் சிலர் சிந்தனையாளர்களாய், 'வந்தவா றெங்ஙனே போமா றேதோ' என்பது போன்ற நுண்பொருள்களைச் சமயசாத்திரங்களில் ஆராய்வதானார். சமயம் உறுதிபட்ட நிலை காணப்பெறவில்லை. இன்னபெற்றிய காலநிலையிலும் தேசநிலையிலும் திருநாவுக்கரசர் திருவவதாரஞ் செய்தார்.

திருமுனைப்பாடிநாட்டிலே திருஆமூர் என்னும் ஊரில் குறுக்கையர் குடியில்வந்த புகழனாருக்கும் மாதினியாருக்கும் திலகவதியார் என்னும் பெண் மணியாருக்குப் பின்பு திருநாவுக்கரசர் திருவவதாரஞ் செய்தருளினர். அவருக்கு மருணீக்கியார் என்னும் பெயரிடப்பட்டது. வளர்ந்துவர உரிய பருவத்தில் எழுத்து பயின்று, கலைகள்பயின்று, வடமொழியும் தென்றமிழும் நன்குகற்றார்கள். இங்ஙனமாக, தம் தமக்கையார் திலகவதியாருக்கு மணப் பருவம் நேர்ந்தது. பெற்றோர் அவரைச் சேனாதிபதியாகும் கலிப்பகையாருக்குத் தருவதென உறுதி செய்தனர். ஆயினும் திருமணம் முடிப்பதற்குமுன் கலிப்பகையார் தம் அரசர் ஏவலால் கடும்போருக்குச் சென்று உயிர்கொடுத்துப் புகழ்கொண்டார். இதற்குள்ளாக புகழனார் விண்ணுலகடைய அவர் மனைவியார் மாதினியார் உடன்கட்டையேறினார்கள். திலகவதியாரும் மருணீக்கியாரும் மாதுயரத்திலாழ்ந்திருந்தனர். இவ்வமயம் கலிப்பகையார் உயிர்துறந்தமை

அறிவிக்கப்பட்டது. திலகவதியார் இச்செய்தியறிந்ததும் "என் தாய்தந்தையார் இவருக்குக் கொடுப்போம் என்றுறுதிசெய்தமையான் இவருக்குரியவள் யான்; அவருயிரோடு என்னுயிரை இசைவிப்பன்" என்று கருதித் தீமூட்டி அதன்கண் விழ முயற்சித்தார். இம் மாபெருந் துயரநிலை மருணீக்கியாரின் மனத்தைக் குலைத்தது. தமக்கையார் திருவடியில் வீழ்ந்து தன்பொருட்டு அத்தீவினை நீக்கும்படி வேண்டினர். அவ்வம்மையார் தம்பியாருளராக என்ற தயாவினுல் தாம்நினைத்தவினையை விட்டவர்களாய் அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி தம்பியாரோடிருந்தனர். மருணீக்கியார் உலகத்தினிலையாமை உணர்ந்தவராய் நிலையுள்ள பொருளாய் இடையறாப் பேரின்பம் தரத்தக்கதுயாதென ஆராயத் தொடங்கினர். சமயக் கலைகள் எல்லாவற்றையும் துறைபோகக் கற்றூர்கள். அவரது சிந்தை கலங்கியது. அறிவும் உண்மையுணராவகை மயங்கியது. திருவருள் கூடாமையால் அமைதி அவருள்ளத்தே தோன்றவில்லை. ஞானிகள் பலரையுங் காண விழைந்தார். அவர்களோடு அளவளாவி உண்மையறிய ஆவலுற்றனர். சமணமுனிவர்கள் பல குறிகளைக்காட்டி அவரைத் தங்கள்பாற்கொண்டனர். அங்கும் அவர்களது சாத்திரங்களைத் துறைபோகக் கற்றூர். தேரர்களைவெல்வதோர் ஆற்றலும்பெற்று வென்றூர். சமணர்கட்கு சமயகுருவாகும் தருமசேனரானர். இவர் இங்ஙனம் நிற்க, திலகவதியார் திருவாமூரைவிட்டு நீங்கிப், பேராத பாசப்பிணிப்

பொழிய பிஞ்ஞகனுகும் சிவபிரான்மீது செறிந்த காதலுடையவராகி, திருவதிகைவீரட்டானம் சேர்ந் தார். நாளும் வீரட்டானப்பெருமானைவணங்கித் திரு வலகிடுதல், மெழுகுதல், நன்மலர் புனைந்துதருதல் முதலியசெய்துவந்தனர். தம்தம்பியார் சைவத்தைத் விட்டுப் பரசமயம் வீழ்ந்தமைக்கு வருத்தங்கொண்டு வீரட்டானப்பெருமானை அவரை மீட்பிக்குமாறு வேண்டுவார். சிவபிரானும் அம்மையார் விண்ணப் பம் அறிந்தருளி அவர்கனவில்சென்று "தூண்டு தவ விளக்கனையாய்! நின்தம்பியைச் சூலைநோய் மடுத்தாள்வம்" என்றருளினர். அங்ஙனமே சூலை நோய் மருணீக்கியார் வயிற்றிடைச்சார்ந்து குட ரோடு துடக்கி முடக்கியது. ஆற்ருது நிலத்தில் வீழ்ந்து அலறினர். மந்திரதந்திரங்களால் நோய் நீங்கினபாடில்லை. தமக்கையாரை நினைந்து அவரை அழைத்துவர ஒரு பாகனையனுப்பினர். அவனும் சென்று, அம்மையார் மறுத்தனர் என்றுணர்த்தி னன். எழுந்து வெண்புடவை சூழ்ந்து ஒருவரும் அறியாமல் வெளிப்போந்து திருவதிகைவீரட்டா னம் சென்று சேர்ந்தார். அக்காலம் கதிரவன் கிழ்க்கே தோன்றும்நேரம். "நீறணிந்தார் அகத் திருளும் நிறைகங்குற் புறத்திருளும் மாறிவரும் திருப்பள்ளியெழுச்சி" என்பர் சேக்கிழார் சுவாமி கள். திருக்கோயிலுக்குச் செல்லும் திலகவதியா ரைக் கண்ணுற்று வணங்கினர். அம்மையாரும் திரு வாளன் திருநீறு ஐந்தெழுத்தோதி மருணீக்கியா ருக்கு அணிவித்தார்கள். திருக்கோயிலுக்குள்

அழைத்துச்சென்றனர். திருவருணேக்கம்பெற்றார். நீற்றாணிறைவாகியமேனியோடு வீரட்டானப் பெருந் தகையைக்கண்டு காதலித்தார். நிறையுறும் அன்பு சிந்தை மிகுந்தது. வாக்கின் வன்மையுயர்ந்தது. "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" எனும் சோதில் திருப்பதிகம் பாடினர். இவ்வண்டமிழால் நோய் தீர்ந்தது. இறைவனும் நாவுக்கரசர் என்றநாமம் தந்தார். புறச்சமயம் சென்று பழித்தமைக்கிரங்கி னர். தமக்கையார் கைத்தொண்டே இச்சிறப்புப் பெறச் செய்ததென்றுணர்ந்தார். இத்தொண்டே உளத்திற்கு அமைதிதருவது; உயிருக்கு இன்பம் விளைப்பது; அருளைக் கூட்டுவது என்றுறுதிகொண் டார். இங்ஙனம் வாழும்நாளில், சமணர்கள் இவர் நிலைகேட்டுத் தங்கள் விருத்தியொழியுமென்று அச் சங்கொண்டனர். அவரையொழிப்பதே கடமையாக் கொண்டு பல்லவ அரசனும் மஹேந்திரனுக்குப் பல பொய்களையுரைத்து மருணீக்கியாரைத் தண் டனைபுரியுமாறு வேண்டினர்கள். அரசனும் அவர் சொற்கேட்டவனாய் மருணீக்கியாரை அழைத்துவர ஏவலாட்களையனுப்பினன். அவர்களும் சிவப்பொலி வுடன் விளங்கும் நாயனரைக்கண்டு அரசனணையை அறிவித்தார்கள். "நாமார்க்குங் குடியல்லோம்" என்ற மறுமாற்றத்திருத்தாண்டகங் கூறி மறுத் தார். ஏவலாளர்பாலிரங்கி உடன்சென்றார். அரச னும் தீரவிசாரியாது நீற்றறையில் இடச்செய்தான். ஏழுநாட்கள்கழித்துக் கண்டபோது "எந்தையார் இணையடி நீழல்போல் குளிர்ந்திருந்த தன்மையில்"

ஊறின்றி விளங்கினர்; நஞ்சூட்டினார்கள்; உண்டு இறவாமல் இருந்தனர்; யானை இடறும்படி ஏவினார்கள்; "அஞ்சுவதியாதொன்றுமில்லை அஞ்சவருவதும் இல்லை" என்ற அருந்தமிழ்பாடினர். யானையும் ஆண்ட அரசைவணங்கி மீண்டு தன்னை ஏவியோர் மீது பாய்ந்தது. கல்லிலேகட்டிக் கடலில்வீழ்த்தினர். சொற்றுணைவேதியனைப் பாடிக் கரையேறவிட்ட குப்பத்தின் பாங்கர் கறையேறினர். ஆண்டவன் அருளால் இடர்பலவற்றையுங் கடந்து திருவதிகைப் பெருமானைக்காணும் பேரவாக்கொண்டு திரும்பினர். தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியரானர். தாழ்வடம்பூண்ட கழுத்துடையவராய் விளங்கினர். நாயகன்சேவடி தைவரும் சிந்தையரானர். நைந்துருகி யன்புநீர்பொழியும் கண்களுடையவரானர். கண்டார்கள்யாவரும் நைந்துருகும் கோலமுடையவரானர். உழவாரப்படைகொண்டு திருத்தொண்டு செய்யும் கடமைப்பாடுடையவரானர். சிவபிரான் திருக்கோயில்கள்கண்டு தொழும் வேட்கையுடையவராய்ச் சிவனடியார்கள்சூழச் சென்றார். சிதம்பரம் முதலியன பணிந்து திருத்தூங்கானைமாடத்தில் இடபசூலக்குறிகளைப் பொறிக்குமாறு இறைவனை வேண்ட, மறைந்துநின்று சிவபூதம்செய்ய அவை பெற்றுவந்தார். சீகாழிப் பிள்ளையாரோடு நட்புக் கொண்டு அவரோடு சிவபெருமான் திருக்கோயில்கள் சென்று தொழுதார். தனித்துத் திங்களூர்ச் சென்று அப்பூதிநாயனாரையாட்கொண்டு அவரது மூத்தமகனுக்கு அரவின்விடம் பாற்றுவித்தார்.

திருவீழிமிழலையில் திருஞானசம்பந்தரோடு வாசியில் லாக்காசுபெற்றுச் சொல்லாற்சாற்றி சோறிட்டார்; உலகின் துயர்கூர் வறுமையொழித்திட்டார். திருமறைக்காட்டினில் திருக்கோயில் திருக்கதவந் திறக்கப் பாடினார். திருவாய்மூரில் சிவபிரானைக்கண்டு வணங்கி, ஞானபோனகரைப் பாண்டிநாட்டிற்குச் செல்ல வழிவிட்டுத் தொண்டைநன்னாட்டிற்குப் போந்தார். திருவேகம்பம் முதலான திருத்தலங்கள் சேவித்துத் தென்கயிலையாகும் திருக்காளத்திக்கு வந்தனர். கண்ணப்பரோடு திருக்காளத்திக்கணநாதரை வணங்கி வடகயிலை எண்ணத்தே தோன்ற வடக்குநோக்கி நடந்துசென்றனர். காடும் மலையும் கான்யாறுங் கடந்தும் பலநாடுகள் கடந்தும் கங்கையாற்றினையும் கடந்துஞ்சென்றார். கணைக்கால்வரை கால்கள் தேய்ந்தன; கைகளினால் தாவிச்சென்றார்; மணிக்கட்டுவரை குறைந்தன; வைத்த உள்ளம் மாற்றார்; உடல்கொண்டு புரண்டு சென்றார்; ஊறுகள் பல நேர்ந்தன. மேலும் செல்லாநிலையுற்றனர். மனத்தால் வடகயிலையில் சிவபெருமான் திருக்கோலம் இடையறாது சிந்தித்தார். சிவபெருமானும் கருணைகொண்டு ஒரு முனிபுங்கவராகப் போந்து அவர்தம் உள்ளத்தினுறுதியை யுணர்ந்தார். ஒரு திருக்குளங்காட்டி 'இங்கு நீர் மூழ்கித் திருவையாற்றில் எழுந்து எனது திருக்கோலம் காண்பாய்' என்றருளி மறைந்தனர். இவர் இறைவனே என்றுணர்ந்தெழுந்த நாயனாரும் உறுப்புக்கள் நிரம்பிய கண்டு திருக்குளத்தில் மூழ்கி 'யாதுஞ்சுவடுபடாமல்'

திருவையா றடைந்தவராய் அங்குத் திருக்குளத்தில் எழுந்து எங்கும் சிவம் சத்தியுமாயிருக்குங் கோலங்கண்டுகொண்டே திருக்கோயிலுட் சென்றார். வெள்ளிவெற்பாகும் விடையின்மீது மரகதக் கொடியாகும் உமாதேவியார் இடப்பாகமாக பவளவெற்பாகும் சிவபிரான் வீற்றிருந்த திருக்கோலங் கண்டு வந்து தொழுது துதித்தனர். பின்னர்த் திருவையாற்றினின்றும் நீங்கிச் சிவத்தலங்கள் பல தொழுதுசென்று திருப்பூந்துருத்தியில் பன்னாள் தங்கினார். அங்கொரு திருமடம் கட்டுவித்து அதன்கண் தங்கி அநுபூதித்திருப்பதிகங்கள் பாடினார். இவர் இங்குளாரென்றறிந்து பாண்டிநாட்டினின்றும் போந்த திருஞானசம்பந்தரை எல்லையில் காண்பான் சென்று ஒருவருமறியாவண்ணம் திருக்கூட்டத்துட்புகுந்து அவரது சிவிகையைத் தாங்கிச் சென்றார். இங்ஙனம் இவர் வருவதையறிந்த ஆளுடைய பிள்ளையார் சிவிகையினின்றும் இறங்கி அவரது திருவடியில் வணங்கினார். அவரும் எதிர் வணங்கிச்சென்று அவரோடு திருமடத்தில் சின்னாள் தங்கினர். பின்னர் அப்பர் பாண்டிநாடு சென்று சிவத்தலங்களைக் கண்டு வணங்கி மீண்டு திருப்புகலூரில் தங்கினார். உழவாரப் படைகொடு திருத்தொண்டு செய்துழி பொன்னும் மணிகளும் தோன்றாநின்றன. ஓடுஞ் செம்பொன்னு மொக்கவே நோக்கும் அடிகளார் அவற்றை அப்படைகொடு அகழியில் எறிந்தனர். மேலும் வானரம்பையர்கள் அவர்மீது விழுந்தும் ஆடியும் பலவும்

புரிந்தும் சித்தநிலை திரியாமை கண்டனர். "திருவாரூரம்மானுக்காளாயினேன் உங்களாலாட்டுணேன்" என அவர்கட்குரைத்து அத்தனார் திருவடிக்கீழ் நினைவகலாப் பான்மையோடு பேதமிலாப் பேருணர்விற்பொலிந்துநின்றார். இறைவனைச் சாருந்நாள் அண்மையிலுள்ளதனை யுணர்ந்து "தன்னுடைய சரணை தமியேனைப் புகலூரான் என்னையினிச் சேவடிக்கீழிருத்திடும்" என்னுங் கருத்துள்ள திருவிருத்தம் பாடினார். மண்முதலாமுலகங்கள் ஏத்த "எண்ணுகேன் என்சொல்லி யெண்ணுகேனே" என்னும் முத்தித் திருத்தாண்டகத்தைப் புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் எனப் புகன்று நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அரசெய்தினார். இந்நன்னாள் சித்திரைத் திங்களிற் சதயத்திருநாள் என்று சேக்கிழார் சுவாமிகள் அப்பர் சுவாமிகள் முத்தித்திருநாளை மாத்திரம் குறித்தது அவர் வாழ்நாளில் அந்நாள் கொண்டாடப்பெற்றது போலும்.

இனி, அப்பர்மூர்த்திகள் அருள் விளங்கச் செய்த அற்புதங்களினியல்பு கருதற்பாலதாம். திருஞானசம்பந்தர் நிகழ்த்திய அற்புதங்கள் போலல்லாமல், இவை தன்புறுவாரை ஆழாமற்காக்கும் இயல்புடையது இறைவன் திருவருள் என்று காட்டுமியல்பின. நீற்றறையினின்றும், நஞ்சின் கொடுமையினின்றும், யானையினின்றும், கடலினின்றும் திருவருள் அரசுகளைத் தப்பிக்கச் செய்தது. திரு

ஞானசம்பந்தரைப்போலவே திருநாவுக்கரசுகளும் திருவருட்டுணைகொண்டு அப்பூதியடிகளார் மகனு ரான மூத்ததிருநாவுக்கரசினை பாம்பின் விடத்தால் துன்புற்று இறந்தவரை உயிர்ப்பித்தார். எனவே இவ்வற்புதங்கள் துன்பத்தில் ஆழாமல் காப்பதும் இறைவன்றிருவருளேயென அக்காலமக்கள் அறிய உறுதியையுண்டாக்கிற்று. இவ்வற்புதங்கள் காண வில்லையாயின் மக்கட்கு உறுதிநேர்ந்திராதென்ன லாம். மையல் நிறைந்த மண்ணுலகில் செம்மை நெறியொழுகத் துணையாவது திருவருளேயென்ப தும் அப்பர் வரலாற்றால் அறியலாகும்.

### 3. சுந்தரமூர்த்தி :

இனி ஏழாந்திருமுறையை யருளியவர் சுந்தர மூர்த்தி சுவாமிகள். அவர்கள் திருஞானசம்பந்தப் பெருந்தகையாரையும் திருநாவுக்கரசரையும் சமய நெறியில் பின்பற்றியவர் என்று அவர் தம் திருப் பாட்டுக்களால் அறியலாகும். அவர்களது தேவாரத் திருப்பாக்களைத் தாம் பயின்றமையை,

"நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்
கரசரும் பாடிய நற்றமிழ்மாலை
சொல்லியவே சொல்லி யேத்துகப்பானைத்
தொண்டனேனறியாமை யறிந்து
கல்லியன் மனத்தைக் கசிவித்துக்
கழலடிகாட்டி யென் களைகளை யறுக்கும்
வல்லியல் வானவர் வணங்க நின்றானை
வலிவலந்தனில் வந்து கண்டேனே"

என்னுந் திருப்பாட்டினிற் குறிக்கின்றார். எனவே அவர்கள் காலத்திற்குப் பிற்பட்டவர் என்று நன்கறியப்படுகின்றது. எத்துணைக்காலம் பிற்பட்டவரென்பதனைச் சுந்தரர் காலத்திருந்த அரசர்களால் அறியலாகும். அவரது வரலாற்றில் சேரர்மன்னனும் சேரமான்பெருமாள் அவருக்குத் தோழராய் இருந்தமை அறியப்படுகின்றது. அவரது காலம் கி. பி. 825முதல் 850வரை என்று குறிக்கப்படுமாயின் சுந்தரரும் இக்காலத்தே விளங்கியிருந்தனர் என்று எண்ணலாகும். மேலும் தமிழ்நாட்டு மூவேந்தர்களும் ஒற்றுமையுடனிருந்தார்கள் என்றறியப்படுகிறது. இம் மூவரும் சிவத்தொண்டர்களாய் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தனர். நாயனாரோடு சில சிவத்தலங்களைத் தரிசித்து வணங்கினர். இம்மூவரும் பல்லவர் பால்பகைமைகொண்டு அவர்கட்குத்திறைகொடாது மறுத்தனர் என்று,

“மண்ணுலகங் காவல்பூண்ட
உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவர்”

என்பதனுள் குறிக்கப்படுகிறது. அப்பல்லவ அரசர் யாவர் என்று உறுதிசெய்யமுடியவில்லை. மூன்றாம் நந்திவர்மனே அல்லது அவனது மகனாகும் நிருபதுங்கவர்மனே என்பது ஐயம். மூன்றாம் நந்திவர்மனே கழற்சிங்கநாயனார் என்று கூறுப. அங்ஙனமாயின் இந் நாயனாரைக் “கடல் சூழ்ந்த வுலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்

சிங்கனடியார்க்கு மடியேன்'' என்று பாராட்டி யுள்ளனர். எனவே மிக்க வெற்றிபெற்ற சீருடைய வரசர் என்றறியப்படுகிறது. இவர் தெள்ளாற்றில் சிறந்த வெற்றிபெற்று வாகைசூடியவர். சுந்தரர் இவ்வரசரைப் போற்றியுள்ளமையால் இவர்காலத் தேனும் அல்லது முன்னேயும் இவர் விளங்கியிருக்க வேண்டும். இவரது மகனுன நிறுபதுங்கவர்மன் காலத்தில் தமிழ்நாட்டில் போர்கள் மிகுந்திருந்தமை யான் பல்லவர்க்குத் திறைகொடாத மன்னர்கள் இருந்தனர் என்று சுந்தரர் குறித்தனர்போலும். பாண்டிநாட்டை யரசாண்ட சீமாறன் சீவல்லபன் என்னும் பாண்டியராவர். சோழநாட்டை விஜயா லயன்மகனுன ஆதித்தன் என்னும் சோழர் ஆண்டு வந்தனர் என்று கூறலாம். ஆயினும் தமிழ்நாடெங் கும் கலாம் மிகுந்திருந்தது. சமயநிலை பௌத்தச் சமணர் போராட்டங்களின்றி யிருந்தது. துறவு பூண்டொழுகுபவரே அழிவிலின்பம் வீடடைவர் என்ற கருத்து சிறிது குறைந்தது. இல்லறத்தில் நிற்போரும் உண்மையகத்துறவுகொண்டு விளங் கின் வீடுபெறுவர் என்பது மக்கள் உணர்ந்தார். "பெற்ற சிற்றின்பமே பேரின்பமாம்" என்னும் மூதுரைக்கு இலக்கியமாய்ச் சுந்தரர் வரலாறு திகழ்ந்தது. உலக இன்பங்களை நுகர்ந்துகொண்டே இறைவன்பால் அன்புபூண்டொழுக வியலும் என் பதும் புலனுயிற்று.

"செடியனுகிலுந் தீயனுகிலுந் தம்மையே மனஞ்சிந்திக்கும்
அடியனுரனை யாள்வரோ நமக்கடிகளாகிய வடிகளே"

என்ற சுந்தரரின் திருவாக்கானுணர்க. மேலும் "சுந்தர வேடங்களாற் றுரிசே செயுந் தொண்டனெனை..............அருள்புரிந்தது" என்று தன் குறைகள் வெளிப்படவுரைத்து வருந்தியதனல் இறைவன் பிழைத்தவரைப் பொறுத்தலே கடமையாகக் கொண்டு அருள்புரிபவன்என்று விளக்கப்படுகிறது. எனவே சுந்தரர் வரலாறு சிவபெருமானது பேரருளுடைமையை நன்கு விளக்குவதாம்.

திருக்கயிலாயத்தில் சிவபொருமானுக்கு அணுக்கத் தொண்டராக ஆலாலசுந்தரனர் திருவெண்ணீறு திருக்கோயில் தாங்கும் பணியையும் மலர்மாலை புனேயும் பணியையும் ஆற்றுபவராக விளங்கினர். அங்ஙனமே உமாதேவியாருக்கு மலர் கொண்டு புனேந்துசூடும் அனிந்திதை, கமலினி என்னும் இரு சேடியர்கள் இருந்தனர். நாடோறும் இவர்கள் செய்பணியில் பிழையாநிற்ப, மாதவஞ்செய் தென்திசைவாழ்ந்திட திருத்தொண்டர் மாண்பு இவ்வுலகில் விள்ங்கிட சிவபெருமான் திருக்கருணை, அதிகாலை மலர்கொய்ய நந்தனவனஞ்சென்ற இரு சேடியர்மீது சுந்தரர் மனம் போக்கிடச்செய்தது. சுந்தரரும் அவர்களைக் காதலிற் கண்ணுற்ருர். அவர்களும் ஆலாலசுந்தரரைக் கண்ணுற்றனர். மூவரும் பிரிந்தனர். யாண்டும் நிறைந்து நிற்கும் இறைவன் சுந்தரர் பற்றுடையராய்த் திரிந்துள்ளமையறிந்து அவரைநோக்கி "நீ தென்றிசையில் பிறந்து அம்மாதரோடு காதலின்பம் கலந்தணே

வாய்'' என்று பணித்தனர். அதுகேட்டதும் திடுக்கிட்டுத்திகைத்த சுந்தரரும் ''ஐயனே! மண்ணுலகிற் பிறந்து மயங்குவழி நீ என்னைத் தடுத்தாண்டருள்'' என்றுவேண்டினர். சிவபிரானும் அதற்கிசைதலும் சுந்தரர் திருக்கயிலாயத்தைவிட்டு நீங்கினர். திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதிசைவமரபில் சடையனர்க்கும் இசைஞானியார்க்கும் மகனாகத் திருவவதாரஞ்செய்தார். ஆரூரர் என்னுந் திருப்பெயர் அவருக்குச் சூட்டினர்கள். பிள்ளைப் பருவமெய்தி வீதியில் சிறுதேருருட்டி விளையாடுகையில் அந்நாடாண்ட நரசிங்கமுனையரையர் ஆரூரரைக் கண்ணுற்று அவர் அழகினை வியந்து சடையனர்பால் விடைபெற்று அவரைத் தன்னரண்மனையில் வளர்த்துவந்தனர். வைதிகத் திருவும் மன்னர் திருவும் குறைவின்றிவளர்ந்தனர். மணப் பருவமுற்றுர். மணம்வந்தபுத்தூரில் அவரது குலத்திற்கேற்பச் சடங்கவிசிவாசாரியார் மகளை மணங்கொள நேர்ந்தனர். திருமணத்தன்று திருநாவலூரினின்றும் ஆரூரரை ஊர்வலமாக மணம்வந்தபுத்தூருக்குக் கொண்டுசென்றனர். திருமணப்பந்தரின் திருமணச்சடங்கு தொடங்குங்காலை சிவபிரான் ஒருகிழப்பிராமணனைகப்போந்து யாவரும்வரவேற்க உட்சென்று ஆரூரர்பால் ''உனக்கும் எனக்கும் ஒரு வழக்குள்ளது. அது தீர்வுசெய்து வதுவை புரிவாயாக'' என்றனர். அஃதென் வழக்கென்று எழுந்து அதனை அறிவிப்பாயாக என்று ஆரூரர்கேட்டலும், இறைவன் ''நீ யென்னடியான்'' என்றனர். ''இஃ

தொரு விந்தை" என்று வியந்த ஆரூரர் 'இவ்வுலகி லில்லாவழக்கு இஃதாகும். ஓரந்தணர் மற்றோரந் தணருக்கு அடிமையாதல் இல்லை' என்று மறுத்தார். சிவபிரான் அதற்கு ஆரூரரது பாட்டனார் எழுதித் தந்தவோலையுண்டு என்றுகூறி ஓர் ஆவணத்தைக் காட்டலும், ஓடிச்சென்று அவர்கையினின்றும் அவ் ஆவணத்தை ஆரூரர் வாங்கிக்கிழித்தனர். கிழப்பிராமணர் ஓலமிடவும் சுற்றத்தவர் நெருங்கி "எங்கிருப்பது" என்று வினவ, "திருவெண்ணெய் நல்லூர்" என்றுரைத்தார். ஆங்கு சென்று சபை யோர் முன் வழக்கிற்கு முறைநாடுவதென யாவரு மிசைந்து கிழவனார் முன்செல்ல அவர்பின் காந்தங் கண்ட பாசாசம்போல்சென்றனர். திருவெண்ணெய் நல்லூர் சென்று சபையோர்முன் வழக்கறிவித்து மூலவோலைகாட்டி இறைவனார் வெற்றிபெற்றார். சுந்தரர் அவருக்குப் பணிசெய்யக்கடவர் என்று அறநிலைகோடாதசான்றோர் கூறினார். அவர்களும் கிழவனாரை இதுகாறும் காணாமையின் இஃதென் காரணம் என்று அறியும்பொருட்டுத் தாம்வசிக்கும் இடம் யாதென்று வினவினார்கள். யாவருக்குந் தானறிவிப்பதாய்ச் சொல்லி, பின்றொடர முன் சென்று திருவெண்ணெய்நல்லூரில் திருவருட்டுறை என்னும் திருக்கோயிலுக்குள் புகுந்தனர். யாவரும் அதிசயித்துநின்றனர். ஆரூரர் தொடர்ந்துசெல்ல முன்சென்ற தம்பிரானார் மறைந்தருளினர். இங்ங னம் வியப்புற்ற ஆரூரருக்கு விண்ணின்றும் ஒரு திருவாக்குக்கேட்டது. 'அன்பனே! முன்பு நீ

எனக்குத்தொண்டன். நம் ஏவலால் மண்ணின்மீது பிறந்தனை. நீ நம்மைப் பாடுக' என்றனர். "நான் எங்ஙனம் பாடுவது" என்று விண்ணப்பம் செய்த லும் "நம்மைப் பித்தன் என்று ஏசினாய். பித்தன் என்றே பாடுக." என்றமாற்றம்கிடைத்தது. ஆகவே "பித்தாபிறைசூடீ" என்ற திருப்பதிகம்பாடி இறை வனை வணங்கினார். பின்புதிருநாவலூருக்குத் திரும்பி சிவபெருமானை வணங்கித் திருத்துறையூர் சென்று தமக்குத் தவநெறிதருதல் வேண்டும் என்று விண்ணப்பஞ்செய்து போற்றிச் சிதம்பரத்திற்கு எழுந்தருளினார். வடக்குத் திருவாயில் வழியாய்ப் பொன்னம்பலம்புகுந்து இனித்தமுடைய எடுத்த பொற்பாதம்கண்டு வணங்கினார். ஆங்குத் திருவா ரூருக்கு வாவென்று உத்தரவு வானின்று எழுதலும் சிதம்பரத்தை விட்டு ஆரூருக் கெழுந்தருளினார். வழியில் இரு பக்கங்களிலுமுள்ள சிவத்தலங்கள் தரிசித்துத் திருவாரூருக்குச் சென்றார். பூங்கோயி லாகும் திருக்கோயிலுட் சென்று தேவாசிரிய மண்டபத்தை வணங்கிப் புற்றிடங்கொண்டபெரு மானைத் தரிசித்தார். இவர் இங்ஙனமாக திருக் கயிலாயத்தினின்றும் நீங்கிய கமலினியார் ஆரூரில் உருத்திரகணிகையர் குலத்தில் பரவையாராக அவ தரித்து வளர்ந்து நாடோறும் திருக்கோயிலுக்குச் செல்லும் முறைமையுடையராயிருந்தனர். ஒருநாள் பரவையார் புற்றிடங்கொண்டநாதரை வணங்கப் போம்பொழுதில் ஆரூரர்கண்டு ஆராதகாதலுடைய ரானார். தம்மைச் சூழ்ந்துவந்த அடியார் மூலமாக

அவர் பரவையார் என்றறிந்து ஆரூரர்பால் அவரைப் பெறுவன் என்று புற்றிடங்கொண்ட பெருமானை வேண்டினர். பெருமானும் அவரிருவர்க்கும் மணஞ்செய்வித்தனர். நாடோறும் காலந்தவறாது திருக்கோயிலுக்குச் சென்று வணங்கிவரும் நியமமுடையராயினர்.

இனி ஒருநாள் தேவாசிரிய மண்டபத்தில் உள்ள "அடியார்க்கு அடியனாவதெக்காலம்" என்னுஞ் சிந்தனையோடு அவர்களைப் புறத்தே வணங்காது சென்றனர். அதனைக்கண்ட தேவாசிரிய மண்டபத்தேயிருந்த விறன்மிண்டநாயனர் "இவரைப்புற" கென்னலும், அடியார்கள் சுந்தரர் இறைவனலாளப்பட்ட பேரடியார் என்று கூறுதலும் "இறைவரையும் அடியார்கூட்டத்திற்குப் புறகு" என்று வெகுண்டனர். புற்றிடங்கொண்டநாதர் திருமுன் சுந்தரர் சென்றதும் சிவபிரானுக்கு உள்ளத்துணர்ச்சிகொடு அடியார்க்கடியனாகும் விருப்பத்தை யறிவித்தலும் "தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்" என்று பாடுக என ஓராணை கேட்டது. அங்ஙனமே திருத்தொண்டத்தொகை பாடுதலும் அடியார்கள்யாவரும் மகிழ்ச்சியுற்றனர். பின்னர் ஆரூரர் பரவையார் திருமாளிகையில் பன்னாட்டங்கியிருந்தனர். சிவத்தலங்கள் வழிபடும் பேரார்வமுடையராய்ச் சென்று வழிபட்டுத் திரும்புவர். இவரது வரலாறு பெரியபுராணத்துள் திருமலைச் சிறப்பு, தடுத்தாட்கொண்ட புராணம்

ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம், சேரமான் பெருமாணாயனார் புராணம், வெள்ளானைச்சருக்கம் என்ற பகுதிகளில் சேக்கிழார் சுவாமிகள் விரித்துரைத்துள்ளனர். இங்கு விரிப்பிற்பெருகும் என்றஞ்சி, சுந்தரர்செய்த அற்புதங்கள் கூறி முடிக்கின்றாம். செங்கல்லைப் பொன்னாகச் செய்தலும், குண்டையூர் நெல்லழைப்பித்தலும், திருமுதுகுன்றர் தந்த பொன்னை ஆற்றிலிட்டுத் திருவாரூர் திருக்குளத்தில் எடுப்பித்தலும், திருவொற்றியூரில் அனிந்திதையாகும் சங்கிலியாரை மணப்ப 'திருவொற்றியூரை விட்டகலேன்' என்று உறுதிமணஞ் செய்துகொள்ளலும், விட்டுநீங்கியபோது கண்படலம் மறைந்துபோதலும், இறைவனைத் தலங்கடோறும் சென்று பாடும் நியமம் விடாதவராய்த் திருவெண்பாக்கத்தில் "பிழைத்துளன பொறுத்திடுவர்" என்றுபாடி ஊன்றுகோல் பெறுதலும், திருவேகம்பம் சென்று வணங்கிப்பாடி இடக்கண்பெறுதலும்' திருவாரூருக்கு மீண்டுஞ்சென்று உரிமையாற்பாடி வலக்கண் பெறுதலும், கழுதுகண்படுக்கும்பானாள் இரவினிற் பரவையார் புலவிதீர இறைவனைத் தூது செலுத்தலும், மீண்டும் பரவையோடிருத்தலும், பகைகொண்ட ஏயர்கோன்கலிக்காமரது நட்புப் பெறுதலும், திருப்புன்கூரில் அவரைச் சிறப்பித்தலும், சேரமான்பெருமாணாயனாரது நட்புக்கொண்டு அவரோடு பல சிவத்தலங்கள் வழிபடலும், காவிரிப் பெருவெள்ளம் வழிவிட திருஐயாறுகண்டு வழிபடலும்,சேரநாடுசென்று சேரமான் தந்த பொருளொடு

திரும்புதலும், திருமுருகன்பூண்டியில் வேடர்பறிக்க இறைவனைப்பாடி அவை மீண்டும்பெறுதலும், திருவாரூருக்குத் திரும்புதலும், சேரமான் பிரிவாற்றாமையை நினைந்து மீண்டுஞ்சேரநாட்டிற்குச் செல்லுதலும், வழியில் அவிநாசியில் முதலையுண்ட பாலனை வரவழைத்துப் பெற்றோர்பால் சேர்ப்பித்தலும், கொடுங்கோளூர் சென்று சேரர்பிரான் விருந்தினராக இருத்தலும், ஒருநாள் திருஅஞ்சைக்களத்துப் பிரானிடம் மனைவாழ்க்கை வெறுத்தமை அறிவித்தலும், வெள்ளானைஏறி இந்திரன்பால் பிரமன் சூழ வானவழியாய் திருக்கயிலைக்குச் செல்லுதலும், சேரமானை நினைத்தலும், அவரும் வெள்ளைக்குதிரை கொண்டு விண்ணிற்பறந்து அவர்முன் எதிர்நோக்கிச் செல்லுதலும், திருக்கயிலையடைந்து சிவபெருமான் திருமுன்பு செல்லுதலும், இறைவன் அருளுதலும், சேரர்பிரான் அருளிய திருக்கைலாய ஞான வுலா கேட்டருளுதலும், அந்நாயன்மாரிருவரையும் முன்னையணுக்கத் தொண்டர் போலவும் கணநாதராக ஏற்றுக்கொள்ளுதலும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றிலுள்ள பகுதிகளாகும்.

இனி இவரது வரலாற்றால் அக்காலத்தேயுள்ள மக்கட்கு ஒருண்மையுறுதியாயிற்றெனலாம். இம்மையில் இன்பத்துன்பங்கள் உயிர்களைத்தாக்கி இன்புறவும் துன்புறவும் செய்யவல்லன; அவைகளைத் திருவருள்நிலைபெற்று அநுபவிப்பதே சால வழகாகும்; அங்ஙனம் வாழ்கின்றபோது அடியார்

கூட்டம் பேருதவியைத் தரவல்லது; வினைகள் விண்டு தொடர்ந்த இன்பம் நிலைப்பதாகும் என்று கருதத்தக்க உண்மை அறியக்கூடும்.

"சைவத்தின் மேற்சம யம்வே
றிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு
நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவார
முந்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற்
றாளெம் உயிர்த்துணையே."

பின்சேர்க்கை.

உ

சிவமயம்

# திருமுறைகளின் பாடற்றொகை

| | ஆசிரியரின் பெயர். | நூற்பெயர். | பாடற்றொகை. |
|---|---|---|---|
| 1. | திருஞானசம்பந்தர் | முதற்றிருமுறை | 1474 |
| | | இரண்டாந்திருமுறை | 1338 |
| | | மூன்றாந்திருமுறை | 1369 |
| 2. | திருநாவுக்கரசர் | நான்காந்திருமுறை | 1070 |
| | | ஐந்தாந்திருமுறை | 1015 |
| | | ஆறாந்திருமுறை | 981 |
| 3. | சுந்தரர் | ஏழாந்திருமுறை | 1026 |
| 4. | மாணிக்கவாசகர் | திருவாசகம் | 656 |
| | | திருக்கோவையார் | 400 |
| 5. | திருமாளிகைத்தேவர் | திருவிசைப்பா | 45 |
| 6. | சேந்தனார் | ,, | 34 |
| | | திருப்பல்லாண்டு | 13 |
| 7. | கருவூர்த்தேவர் | திருவிசைப்பா | 103 |
| 8. | பூந்துருத்திநம்பிகாடநம்பி | ,, | 12 |

| | ஆசிரியரின் பெயர். | நூற்பெயர். | பாடற்றொகை. |
|---|---|---|---|
| 9. | கண்டராதித்தர் | திருவிசைப்பா | 10 |
| 10. | வேணாட்டடிகள் | ,, | 10 |
| 11. | திருவாலியமுதனார் | ,, | 42 |
| 12. | புருடோத்தமநம்பி | ,, | 22 |
| 13. | சேதிராயர் | ,, | 10 |
| 14. | திருமூலர் | ,, | 3047 |
| 15. | திருவாலவாயுடையார் | திருமுகப்பாசுரம் | 1 |
| 16. | காரைக்காலம்மையார் | திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் | 22 |
| | | திருவிரட்டைமணிமாலை | 20 |
| | | அற்புதத்திருவந்தாதி | 101 |
| 17. | ஐயடிகள்காடவர்கோன் நாயனார் | க்ஷேத்திரத்திருவெண்பா | 24 |
| 18. | சேரமான்பெருமாள் நாயனார் | பொன்வண்ணத்தந்தாதி | 100 |
| | | திருவாரூர்மும்மணிக்கோவை | 30 |
| | | திருக்கயிலாயஞானவுலா | 1 |
| 19. | நக்கீரதேவநாயனார் | கைலைபாதிகாளத்திபாதி | 100 |
| | | திருஈங்கோய்மலைஎழுபது | 70 |
| | | திருவலஞ்சுழி மும்மணிக்கோவை | 15 |
| | | திருவெழுகூற்றிருக்கை | 1 |
| | | பெருந்தேவபாணி | 1 |
| | | கோபப்பிரசாதம் | 1 |

| ஆசிரியரின் பெயர். | நூற்பெயர். | பாடற் றொகை. |
|---|---|---|
| | காரெட்டு | 8 |
| | போற்றித்திருக்கலிவெண்பா | 1 |
| | திருமுருகாற்றுப்படை | 16 |
| | திருக்கண்ணப்பதேவர் திருமறம் | 1 |
| 20. கல்லாடதேவர் | திருக்கண்ணப்பதேவர் திருமறம் | 1 |
| 21. கபிலதேவர் | மூத்தநாயனர் திருவிரட்டைமணிமாலை | 20 |
| | சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை | 37 |
| | சிவபெருமான்திருவந்தாதி | 100 |
| 22. பரணர் | சிவபெருமான்திருவந்தாதி | 101 |
| 23. இளம்பெருமானடிகள் | சிவபெருமான் மும்மணிக்கோவை | 30 |
| 24. அதிராவடிகள் | மூத்தபிள்ளையார் மும்மணிக்கோவை | 23 |
| 25. பட்டினத்துப்பிள்ளையார் | கோயில்நான்மணிமாலை | 40 |
| | திருக்கழுமல மும்மணிக்கோவை | 30 |
| | திருவிடைமருதூர் மும்மணிக்கோவை | 30 |
| | திருவேகம்பமுடையார் திருவந்தாதி | 100 |

| ஆசிரியரின் பெயர். | நூற்பெயர். | பாடற்றொகை. |
|---|---|---|
| | திருவொற்றியூர்ஒருபாஒருபது | 10 |
| 26. நம்பியாண்டார்நம்பி | விநாயகர் திருவிரட்டை மணிமாலை | 20 |
| | கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம் | 70 |
| | திருத்தொண்டர்திருவந்தாதி | 87 |
| | ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி | 101 |
| | ,, திருச்சண்பைவிருத்தம் | 11 |
| | ,, திருமும்மணிக்கோவை | 30 |
| | ,, திருவுலாமாலை | [illegible] |
| | ,, திருக்கலம்பகம் | 49 |
| | ,, திருத்தொகை | 1 |
| | திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை | 11 |
| 27. சேக்கிழார் | திருத்தொண்டர்புராணம் | 4286 |
| | | 18379 |


குறிப்பு:— பாடற்றொகை எண் தற்காலத்துக் கிடைக்கும் புத்தகங்களில் காணப்படும் பாடற்றொகையாம்,